
ஆன்ம உணர்வு
(ஸ்வய ஞானுபவம்)
இதழ் 2
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஆன்ம உணர்வு


## (ஸ்வய ஞானானுபவம்)

## இதழ் 2

**வெளியீடு :**
அன்பின் குடில்,
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
பவானி தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
போன் : (04256) 229655

முதற்பதிப்பு : குரு பூர்ணிமா ஜூலை 2010
இதழ் 2
350 பிரதிகள்


அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்,
பெங்களூர் - 560 003.
தொலைபேசி : (080) 23346025



கருத்து :- ஆகவே முன் பாடல்களில் கூறியபடி, அகண்ட பரபாவனை/ இடையறாது செய்து வந்தால் பேதம்/ விருப்பு வெறுப்பு/ குற்றம் குறை/ ஆகியவை கற்பனையின் மனம் நாசமாகும். இதைவிடுத்து வே று எ ந் த மா ர் க் க மு ம் ஜீவன் முக்தியைத் தராது; என்பது அனுபவ ஸ்ரீமஹான்களின் வாக்காகும்.

42

எப்போதும் இயம்பாமல் மௌனியாகி,
எவருடனும் கூடாமல் ஏகாந்தத்தில்,
தற்போத அசையாமல் இருந்து சற்றும்,
தவங்காத மனதுடனே ஒருமையாகி,
தற்போத சுகக்கனமாம் பரம் நாம் என்றே,
சந்ததமும் பாவித்து சாந்தநதித்,
தற்போத சூன்யனாய் விகற்பம் தீர்ந்து,
தற்பதமே தாமாகி முக்தனாவாய்.



110


கருத்து :- ஆரம்பசாதனையாளனுக்கு உள்ள,
நாவு அடக்கத்தை! குறிப்பிடுகிறார். அதாவது
வா ர் த் தை யை கு றை க் க வும்.

புத்து வார்த்தை பேசும் இடத்தில் இரண்டு வார்த்தை
பே.........ச.........வு.........ம்.

இதனால் குடும்பம்! என்ன ஆகுமோ? தொழில்
என்ன ஆகுமோ? வாழ்க்கை என்ன ஆகுமோ?
என்ற பயபீதியை, உண்மையாய் உண்டுபண்ணும்.
உன் இவ்வாறு வாழ்க்கையென்று, இவ்வாறு வாழ்வு
(வினையின் நாடகமாய்)
திட்டமிட்டு, முடிக்கப்பட்டும் ஒன்றாகும்.
ஆகவே சற்றேனும், சந்தேக கலக்கபயம் வேண்டாம்.
இதன் முக்கியம் என்ன வென்றால்?

(A) தற்போதம் சூனியமாக வேண்டும் :- படிப்பதும்! கேட்பதும்! வாய் ஞானமாக இருக்கவாகாது.


(B) தற்புதம் தாமாக இருக்க வேண்டும் :- படிப்பதும்! கேட்பதும் அனுபவ ஞானமாக இருக்க வேண்டும்.



43

தேகமுதல் ஒருகாலும் நாம் அன்றென்றும்;
தெரிவுருவாம் பரப்பிரம்மம் நாமேஎன்றும்;
பாகமுற வொரு பொருளும் இல்லையென்றும்;
பலபொருளும் பரப்பிரம்மம் தாமேயென்றும்;
(இந்த) ஏகபரபாவனையை இடைவிடாமல்;
எப்போதும் இனிமையுடன் செய்வாயாகில்;
மோஹமெல்லாம் ஒழிந்து உடனே;
முக்தனவாய்,
மொழிந்ததிவோர் ஐயமில்லை ஸத்தியம் தான்.


கருத்து:- நம்முன்னால் காணக்கூடிய, நாமரூப!
ஜக ஜீவ! தோற்றம் எல்லாம், இ ன் னா ர் &
இ ன் னா ர்! இ ன் ன து & இ ன் ன து!
என பின்னிப் பிணையாமல், எ ல் லா ம்!
நேருக்கு நேராக, காணும் பிரம்மம் என்றும்;
அது நாமே! என்றும்; நமக்கு அயலாக எதுவும்
இல்லை என்றும்; பலபல/பலபல/பலபல!
பொருளும்! பரப்பிரம்மம் தான் என்றும்;



அகண்ட ஏக பர பாவனையை
இடைவிடாமல், தைலதாரை போல், ஓர்மித்து,
சிந்திப்பாயானால், உன் அறியாமையின்
கண் கட்டாகிய மோஹ வலை நாசமாகும்
அந்த நிலையே, ஜீவன் முக்தனவாய் துலங்குதலாம்.


44 நற்பிரம்ம விவேகவழி யுள்ளா தீரர்;
நாரிமுகச் சுகத்திச்சை பண்ணும் போதும்,
பற்பலவாய்த் தோன்றிய அந்த சுகத்தையெல்லாம்,
பரப்பிரம்ம சொரூப சுகம் எனவே ஓர்ந்து,
கற்பிதமாம் விஷய சுகம் அனுபவிக்க,
கனவிலுமே கருதாது தைரியத்தோடு,
அற்பமில்லா அகண்டபர சுகமே சேர,
அகண்டபர ஞானபவம் அடைய வேண்டும்.

கருத்து :- ஒருவனுக்கு ஒருத்தி என்றும், ஒருத்திக்கு ஒருவன் என்ற தர்மத்தை மறவாதே.



113

ஆரோக்கிய வாசகம் :- நற்பிரம்ம விவேகவலி உள்ளத்தீரர்!
ஆத்மஞானப் பயிற்சியில், ஜீவன் முக்திபெற
தகுதி உடைய! ஆணை & பெண்ணை!
பிராப்த !...... வினை!...... விதி!......
வசத்தால் அச்சம்பவம் நடக்க நேர்ந்தால்?
தாமம்........ வேகம்........ மோஹம்.... இருக்கவா கூடாது.
நிதானம்........ பொறுமை........ ஹரேராம் ! இருக்க வேண்டும்.
அங்க கவனம் வேண்டாம். தற்கவனம் வேண்டும்.
சந்தேகம் ! களங்க எண்ணம்! கலக்க பயம் வேண்டாம்.
கர்மா முடிவுறுகிறது. தாயம் அதை நடத்துகிறது.
இங்கு இயங்கும் நியதியால் நாம்! ஸ்ரீபகவானே!!!!
அங்கு இயங்கா நியதியால் நாம்! ஸ்ரீபரமேஸ்வரனே!




114

இரண்டு மண் பதுமைகள்! வினையை கழிக்கின்றன.
ஆணும் மண்! மண்ணாகவே! முக்காவலும் இருக்கிறது.
காலத்தை வைத்து, காரணம் இயங்குகிறது.
காலத்தை முடிக்க, காரியம் இயங்குகிறது.
காலமோ! கால வினையோ! பதுமைகளோ! நாம் அறிவு
அறிகிறோம்; ஆதாரமான நாம் ஒன்றே சத்தியம்.
என்ற திட உணர்வோடு! நடைபெறுவோம்.

45


நினைவை வெளியாம் நீக்கி மனோவாக்குக் கெட்டா(து);
நிஜவடிவாய் நிற்பதுவே நிறைந்த முக்தி.
நினைவு அணுவும் வேறாக நிகழாமாகில்;
நினைவதுவே மஹத்தான பந்தம் ஆகும்.
நினைவறவே நிற்கின்ற நிஷ்டைதானே;
நிஜமான அத்வைத நிலையாகும்.
நினைவறவே நிற்கின்ற நிஷ்டைதானே;
நிரதிசய ஆனந்த நிலையாகும்.

115



கருத்து :- இப்பாடலில், எண்ணம் இல்லாமல் சும்மா இருப்பதையே, வலியுறுத்துகிறது.


கவனம் தேவை :- மனமே! எண்ணம்! ஆகிறது. எண்ணமே மனமாகிறது. அவ்வெண்ணமே வாக்காகிறது. அவ்வாக்கே கர்மாவாகிறது. இங்கு மனம் தூய்மையானால், எண்ணம் நின்றுவிடும். நி று த் த ப் ப டு ம்! இது சத்தியம். எண்ணம் மன சம்பந்தம். மனம் மாயா சம்பந்தம். மாயா! ஸ்ரீ பகவான் வசம். ஆகவே சர்வார்ப்பணம்! ஸ்திரமாகவும்! இயல்பாகவும்! அதிகவனமாகவும்! இருந்தால் மாயா! தம் மனதை! ஈர்த்துக் கொள்ளும். மாயாவினுள் மனம்! மறைந்தால் எண்ணம் எழாது. எண்ணம் இராது. இதன் காரணம் :- அனைத்து நாமரூபங்களும், ஸ்ரீ பகவானாகிய, உ______ன் சிருஷ்டியாகி விடும். உன் சிருஷ்டியில், உன் எண்ணம் இருக்க முடியாது. அதுவே நிரதிசயானந்தமும்! அத்வைதமும் ஆகும்.



46

மஹத்தான மாயை என்ன? அவித்தை என்ன?
மஹத்தான பந்தமென்ன? மூக்தி என்ன?
மஹத்தான சித்தமென்ன? ஜீவனென்ன?
மஹத்தான ஜகங்களென்ன? ஈசனென்ன?
மஹத்தான நா ம ம் என்ன? ரூ ப ம் என்ன?
(இதை) மதிக்கின்ற மனதுடைய நினைவிருத்தும்;
மஹத்தான பரப்பிரம்ம சொரூபமன்றி;
மற்றனைவும் இல்லையெனவே நிச்சயிப்பாய்.


கருத்து :- இந்த நாமரூப! ஜக ஜீவ! ஈ.....ச!
சிருஷ்டி யானது, மாயா சம்பந்தம் கொண்டிருப்பதால்,
அவித்தையே வித்தையாக (பொய்யே மெய்யாக)
காட்சி அளிப்பதால், மனம் வசம் அகப்பட்டோர்!
மட்டும் மயங்குகின்றனர். பந்தப்பட்டதால்
முக்தி அடைய வேண்டும் என்றும், சித்தம் வசம்
அகப்பட்டோர் ஜீவன் என்றும்; சித்தத்தை ஜயித்து
ஸித் ஆனோர் சிவன் என்றும்; அந்த சிவன் சிருஷ்
டியே ஜகத் என்றும். இப்படி மயக்கிய மாயாயும்!



மனமும், இணைந்து ம ற த் தா ன!
நா ம ரூ ப! ஜக ஜீவ! தோற்றங்களை!
வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறதென்று,
மெய் உணர்வால் உணரவேண்டும். ஆனால்
இதில் கூறிய, அனைத்தும், மண் இல்லாமல்
பாண்டம் எப்படி இல்லையோ! அப்படியே
காவரத்த பரம் இல்லாமல், இவையொன்றுமில்லை
அதுவே நாம். நாமே அது! என ஆனந்தம் அடைக.

---


(47) அநவரதம் அகம் பிரம்ம நிச்சயத்தை,
ஆதரவோடு அதிதிடமாய் அப்யாசித்தால்.
மனதிலுள்ள விகற்பமெல்லாம் முன்பு தீர்ந்து,
மனதுதான் விறகற்ற வன்னியே போல்;
தனது நிஜ அதிஷ்டான பிரம்மத்தின் கண்,
தான் தானே சாந்தியுறும் ஆதலாலே,
சொன்ன விதமாய் அகம் பிரம்ம நிச்சயத்தை.
சுகமுறவே முமுட்சுவெல்லாம் பழகல் வேண்டும்.





கருத்து :- அகம்பிரம்ம ! பாவனையை, அதாவது
அதுவே நாம் ! நாமே அது ! என்ற பரபாவனையை !
தைலதாரை போல் சிந்திக்காய், விறகைப்
பற்றிய அக்கினியானது விறகு தீர்ந்தவுடன்,
எப்படி தான் தானே, சாந்தி ஆகுமோ ! அப்படி
மனதின் குற்றம் குறை பாவனையை, அகம்பிரம்மம் !
பாவனையானது ! சாம்பலாக்கி விட்டு, தான் தானே
தன்யதாஸ் தானத்தில் ஒடுங்கி விடும். இது வைகீயம்
ஆகவே அதுவே நாம் ! நாமே அது ! என ஆனந்தம் அடைக.

48 சொல்லும் மலின வாதனையும் மனதின் தர்மம்.
சுத்தபர வாதனையும் மனதின் தர்மம்.
அவையும் ஒரு வாதனையும் பரத்தில் இல்லை.
ஆதலினால் அம்மயமாய் நிஷ்டை சார்ந்து,
மலினமென / சுத்தமென / மதிக்கப்பட்ட ;
மனதுடைய வாதனைகள் ஒன்றுமின்றி.
சலனமில்லா அக்கி போலும் ; காஷ்டம் போலும்,
சற்றேனும் சலியாமல் சுகித்திருப்பாய்.




119

கருத்து :- இப்பாடலில் பரபாவனை இருநிலைகளில் கூறப்படும். அதாவது மலின வாதனை என்பது லௌகீகம் ஆகும். சுத்த பர வாதனை என்பது தெய்வீகம் ஆகும். ஆகவே இவ்விரு வாதனையும் பரத்திற்கு இல்லை என்பது. பர சொரூபத்திற்கு எந்த வாதனையும் (உபாதையும்) இல்லை என்பதே ஸத்தியம்.

சாஸ்திரம் :- உலகிற்கும் உலக ஜீவர்களுக்கும், போதிக்கும், புண்ணிய பாபம் ஆகும். இதுவும் வாதனையே. (உபாதையே)

வேதம் :- இது தேவ தெய்வங்களின் இருப்பு & இயக்கம் ஆகும். இது (ஆஹார நியம) வைதீக கர்மமாகும். இதுவும் ஓர் வாதனையே (உபாதையே) வாதனை என்ற உபாதையானது, ஓர் அசைவு ஆகும்.


வேதாந்தம் :- இது சுத்த அத்வைதம் ஆகும். பிறவாநிலையாகிய, ஜீவன் முக்தி ஆகும். இதற்கு வாதனையென்ற, உபாதையாகிய, எந்த அசைவுகளும், இல்லையென்பதே ஸத்தியம்.



120

ஆகவே புண்ணியமாமும் & ஸத்திய தர்மமும்!
என்ற இவ்விரு அசைவுகளையும், மு ழு மை யே
ம ன தா வு ம்! அ றி வா வு ம்!
கயிற்றில் வந்த பாம்பாகவும்! கானலில் தோன்றிய ஜலமாகவும்!
இல்லை இல்லை! இல்லை இல்லை! இல்லவே இல்லை!
என தள்ளிவிட்டு, ஜகமோ! ஜீவனோ! ஈசனோ!
நாமரூபமாக! இல்லை என்றும், அதுவாக இருக்கின்றோம்
என்றும். அதுவே நாம்! நாமே அது! என ஆனந்தம்
அடைக.


49 எல்லையில்லா வேதமெல்லாம் சித்த சுத்திக்கு,
ஏதுவாக உபாசனை முன்பங்கங்கே,
சொல்லியதால் சித்தத்தின் சுத்தியுற்றோர்,
சுகமாக மோக்ஷ நிலை சார்வதற்கே.
அல்லலில்லா ஆனந்த கனமேயான,
அகண்ட பரிபூரணமாம் பரசிவத்தில்,
தவ்வெனவே அசையாமல் கலந்திருக்கும்,
தாங்கும் இல்லா (த) நிஷ்டையினை
காட்டுகின்றே.



கருத்து :— சாஸ்திரம் உடல், உலக! ஒழுக்கத்திற்காகும். இது அங்க சுத்தியின் நிமித்தமாகும்.

வேதம் :— தேவ தெய்வ இருப்பும்! இயக்கமும்! இணைந்து தெய்வ உபாசனையை! கூறுவதாகும். இது சித்த சுத்தி ஆகும். அங்க சுத்தியினால், தான் சித்தசுத்தி! பெறமுடியும். சித்தசுத்தியினால் காரண ஒழுக்கம்! பெறுவதே ஆத்ம ஞான அடிப்படை ஆகும். இந்நிலை பெற்றபின், ஸ்ரீ ஸத்குரு உணர்த்தும் அதுவே நாம்! என்ற அகண்ட பரபாவனையில்! கருத்தலில்! தீபோல் ஜ்வலித்து அனுபவம் கூடுவதாக.


50 தாவ முதல் கற்பனையே இவாமையாவே.
காண்கின்ற காட்சி முதல் இருப்பதெங்கே?
தூவ முதல் காந்திரமே இவாமையாவே.
தொடர்கின்ற பவபந்தம் இருப்பதெங்கே?
மூலமதாம் அஞ்ஞானம் இவாமையாவே.
மூளுகின்ற அதன் செய்கை இருப்பதெங்கே?
ஆவயமாம் பரப்பிரம்மம் அனைத்தும் என்றும்.
அதுதானே அகமென்று அனுசந்திப்பாய்.





கருத்து :- அந்த காலாதீத ஒன்று, கால, தேச,
வர்த்தமானம்! கடந்ததாக இருப்பதால், எந்த
தோற்றமும்! அதன் நாமரூப காட்சியும் இல்லை.
எந்த கால நாமரூப! காட்சியும் இல்லாமையால்,
சொந்த, பந்த, பாச, பற்றின் பவபந்தம் இல்லை.
மேலே கூறிய, இவ்விரண்டையும், தோற்றுவித்தோம்
என்ற, ரூபமானயை (யோக! போக மாயா) இல்லா
தன்மையினால், மனம்! வினை! விதி! இல்லை.
காணும்! கேட்கும்! அனைத்தும்,
பரத்திற்கு அன்னியமில்லை. அதுவே நாம்! என
ஒன்றாய் நிலைத்து, ஆனந்தம் எய்துவாயாக.


51 ஒருவாருரும் ஒருகாலும் ஜனிக்கவில்லை.
ஒருகாலும் ஜனியாதது இருப்பதெங்கே?
பிரிவுறவே ஜனியாதது மற்றும் யாதும்,
பேதமடைந்து விடுமென்று விளம்புவதெங்கே?
அரியவனே! ஆதலினால் அகண்டமான,
அத்வைத! பிரம்மத்திற்கு அளவே இல்லை.
சர்வமுமே பிரம்மமென்றும். அது நாமென்றும்,
நிலையாத பாவனையால் சாந்தமவாய்.



(23)

கருத்து :- ஜகம்! ஜீவ! தாவர! எந்த நாம ரூப
தோற்றங்களும் உண்டாகவில்லை.
மண்ணின் மாயா காட்சியில் மனம் மிரளுகிறது.
எல்லாம் மண்ணே! மண்ணுக்கு அன்னியமாய்
எவரும்! எதுவும்! இல்லை யென்பதே சத்தியம்.
நாமரூப! எந்த பொருளும், வந்தது! என்றும்,
இருந்தது! என்றும்; கெட்டுப் போனது! என்றும்,
பழையபடி (புதிதாக) தோன்றியது! என்றும்; சொல்ல
இடமே இல்லை. எப்படி என்றால்?
ஜக ஜீவ தோற்றம் :- கயிற்றில் வந்த பாம்பாகும்.
பாம்பு வந்ததும் இல்லை. அது மறைந்ததும் இல்லை.
வந்ததாக தோற்றியது! மனமிரட்சி ஆகும்.
ஸ்சுருதி :- கானல் ஜலமாகும். வெய்யிலில்!
இல்லாத ஜலம்! இருப்பதைப் போல் அறிவின்
கற்பனையால் (ஜீசுன்) தோற்றியது. அந்த
அறிவு! பொறியில்! லயமாகும் போது, அந்த
கானல் ஜலமும் (ஸ்சலம்) இல்லாது மறையும்.

124



வாக்கிய விளக்கமாகவும்! உதாரண நிமித்தமாகவும்
எல்லாம் மண்ணே என்றும், பரமாகிய மண்ணே!
என்றும், பரமாகிய நாமே! என்றும், நமக்கு
அன்னியமாய் எதுவும் இல்லை என்றும்,
சலிப்பு & சஞ்சலம்! இல்லாமல் அனுபவம் மெய் வாயாகு

## குறிப்பு.


தாவாதீத பர சொரூபமானது! இருப்பு நிலையில்,

(A) ஸ்வயம் ஜோதியாகும்.
இது பேரறிவால்! உணரும் நிலையாகும்.

(B) தோற்ற நிலையில், தனித்து உபயோகம்
இல்லாத, பாலைவன மண் & சமுத்திர ஜலம்! ஆகும்

(C) இயக்கத்தின் ஆதார நிலையில்!
(அறிவின் நிலையாகும்)
மண்ணும்! ஜலமும்! இணைந்து பிணைந்த!
களிமண்! ஆகும் என உணர்க.

125




(D) இருப்பும்! தோற்றமும்! இயக்கமும்!
ஒன்றான நிலையில்! நாமரூப! ஜக ஜீவ!
தாவர வர்க்கங்கள்! ஆகும் என உணர்க.

இதனை வைத்து உணரும் நிலையில்.


(1) நாம ரூப! ஜக ஜீவ! தாவரங்கள்! அனைத்தும்
மண்ணும் ஜலமும் (பரமும்! மாயாவும்)
இணைந்து பிணைந்து நின்றவே.

(2) ஈஸ்வராதிகள்! இருப்பின் நிலையில் ஜோதியே.

தோற்றம் & இயக்க நிலையால்! மாயா ரூப ஆகும்.

குழந்தையனை! மனதால் காணவும்! பேசவும்! விளக்கவும்
முடியும், என, ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.
பக்தையனை! ஆரம்ப நிலை அனுபவம்! அறிவாகவும்.
அனுபவ முதிர்ச்சியில், பேரறிவாகவும் உள்ளவர்
உணர முடியும் (காணமுடியாது)
என ஸ்ரீ மஹான்கள் வாயிலாக அறிகிறோம்.


126



52


எப்பொருளும் எங்கேனும் இருக்குமாகில்.
இவ்விதமாய் இது உளது என இயம்பல் வேண்டும்.
ஸித்பொருளோ! யன்றி; ஒருபொருளுமென்றும்;
திரிதும் இல்லாத் தன்மையினால்
இயம்புதற்கிங்கு,
அற்பவுமே இடமில்லை. ஆதலாலே,
அகண்ட பரப்பிரம்ம வடிவான எம்மில்,
சொற்பொருளோர் அனுபவமில்லையென்றெய்யோரும்;
சும்மாவே இருந்து மிகச் சாந்தருவாய்.

கருத்து :- இதன் கருத்தை உள் ஆழ்ந்து உணரவும்.
நாம ரூப! ஜக ஜீவ! தாவரங்கள்! என இப்படியாக
தோன்றும், எந்த தோற்றமும்! இ து தா ன்.
என்றோ; இ ப் ப டி த் தா ன்! இருந்தது;
அல்லது இருக்கிறது; அல்லது இருக்கும்; என்றோ,
உறுதியாக சொல்ல முடியுமா? என்றால் முடியவே முடியாது.



126A


தோன்றி ! இருந்து ! மாறி ! மறையும் !
தன்மையதே, நாம ரூப ஜக ஜீவ சொரூபமாகும்.
ஆணவ் அவை அனைத்தும், மண்ணுக்கு (பரத்திற்கு)
அன்னியமில்லை! யென்பதே லக்ஷியம்.
ஆணவ்?
சொற்பொருளோர் அணுவும் இல்லை யென்பதை
உணரவும்:- பேசிப் பேசியே! விளக்கம்!
கொடுத்தும்! விளக்கம் பெற்றும்! நாமரூபம்!
அ னை த் தி ற் கு ம்! உ ண் டு!
எ ன, உ யி ர் கொ டு க் கி றோ ம்.
வாக்கின் .......... விளக்கம் ....... இல்லையானால்
அதுபற்றி நாமரூப! ஜக ஜீவ! தாவரம்! எத்தோற்றமும்!
இருந்தும் இல்லாததே. பார்ப்பதாயும்! கேட்
பதாயும்! பேசுவதாயும் தான்! உலகம் உண்டென
எண்ணிக் கொண்டிருக்கிறோம். (சொற் பொருள் என்றால் நாமரூபம் எனவுணர்க.)



பார்ப்பதையும் கேட்பதையும் அப்படியே உண்மையென நம்பாதே.

சும்மா இரு! என்றால்:- பார்ப்பதிலும்! கேட்பதிலும்!
அடங்க எண்ணமில். நாம்! அடங்கி இருந்து கொண்டு
இறைகுரு! உணர்வோடு, பேசினால் அங்கு
நீ பேசமாட்டாய். உன் வினை விதி! கண்டு
அது! (மாயாமனம்) மூலமாக சிக்கல் இல்லாமல்
பேசும். வினை முடியும். வினை தொடராது. இதனால்
நீ! ஆனந்தம் நீ! பெறமுடியும். அதுவே சும்மா சுகமாக இருப்பதாகும்.

53 சகலமுமே பிரம்மமென்னும் நிச்சயத்தால்.
(இந்த) ஜகமுதலீது, உண்மையென்னும் பிராந்தி நீங்கும்.
திகழ் பிரம்மம்! நாம்! என்னும் நிச்சயத்தால்,
தேகமுதல் நாம்! என்னும் பிராந்தி நீங்கும்.
தருமகனே! ஆதலினால் எல்லாம் என்றும்,
தற்பிரம்மம் தாம் என்னும், அது நாம் என்றும்,
வெகுதிடமாம் அநுபூதி! அடைந்த போதும்,
வேறறவே மிகவும் உபசாந்தனாவாய்.




128

கருத்து:- கண்களால் காணும் ! எல்லாமும் !
பரமாகிய மண்ணே ! மண்ணாகிய பரமே !
மனிதஇனம் உட்பட 84 லக்ஷம் ஜீவசரீரங்
பரமாகியமண்ணே ! மண்ணாகியபரமே ! கரும்
எல்லாம் நாமே ! என்னும் திட உறுதியினால்
தேகாத்ம புத்தியும் ! நாமரூப ! பிராந்தி !
மயக்கமும் சர்வநாசமாகும் ஆகவே அகண்ட
பர பாவனையை ! செய்து அது நாம் ! என ஆகுவாயாக.

54 பதம்பதமாய்ச் சொல்லியிடும் நாமம் இல்லை.
பதார்த்தமெனச் சொல்லியிடும் உருவம் இல்லை
விதவிதமாக விளங்கிய எவ்வொருவரும் (எ.சன்) இல்லை.
விரிந்த ஜக ! ஜீவ ! பரம் ! எவையும் இல்லை.
சுதந்திரமாய் ! ஒருகாலும் ஒன்றுமின்றி,
சுத்தமதாய் உளது பரப்பிரம்மம் ஒன்றே.
நிதம் தவறாது அப்பிரம்மம் நாமே என்று,
நிலைபெற்ற ஞானத்தால் முக்தனாவாய்.

129




கருத்து :- இப்பாடலில் சுதந்திரமாய்! என்ற ஓர் வாசகம் வருவதை காண்க.

சுதந்திரம் :- ஓர் அளவாக சுருக்கக்கூடியது ஆன்மா! ஆகும். அளவற்றது பிரம்மம் ஆகும். முந்தையது கூட ஜீவம். பிந்தையது சமுத்திரம் ஆகும் என உணர்க. ஆன்மா! என்றுமே, அது ஸ்வதந்திரம் (சுதந்திரம்) ஆனது என கொள்க.

(A) அந்த சுதந்திரமான, ஆன்மாவானது! அறிவு! என்ற நிலையில், மாயாவை மீறிய நிலையில்; அது ஸ்ரீபகவான் ஆனது. இந்நிலையில் மாயாவின் திரை! (மயக்கம்) மூடி இருப்பதை ஞானிகள் சொல்ல, கேள்விப்படுகிறோம்.


(B) அந்த சுதந்திரமான ஆன்மாவானது! நம் விளையாட்டின்! நிமித்தமாக, மனதால் மூடுண்டு! நிலையில்; ஜீவன்! என ஆனது. இந்த மனதின் கவசத்திரை! மூடியிருப்பதாக, ஞானிகள் வாயிலாக அறிகிறோம்.

சந்தேகு?





இப்படி இருநிலை! விளக்கமும் ம ன ம்!
(திரை) மூடியிருப்பவர்களுக்காக சொல்லப்
பட்டதாகும். அறிவோமும்! யோறிவோமும்!
இருக்கப்பட்டவர்களுக்கு, இவ்விருதிரையும்
இல்லை யென்பதே ஸத்தியம்.
ஆகவே, ஆன்மா என்பது, மயக்கத்திரையும்,
அடிமைத்தனையும்! இல்லாத சு த ந் தி ர
ப ற வை! (இது உதாரணமே உண்மை அல்ல.) ஆகும்.
இனி பாடலின் கருத்து:- நாமம் என்ற
வாக்கின்! விளக்கம் இல்லியானால்,
ரூபம் இருந்தும் இல்லாததே! ஆகும்.
ஆகவே ஹதஹதமாக! ரகரகமாக! சொல்வாய்
விளங்கும்! எப்பொருளும்! மண்ணாகிய பரமே ஆகி
ஒன்றும் இன்றி என்று விளைந்த நாமரூப பரிணாமமும்
இல்லாத மண்ணே! ஆகும் எனக் கொள்க. ஆகவே
அதுவே நாம்! நாமே அது! என ஆனந்தம் அடைக.






## 55

இல்லையென இயம்பியிடும் பொருளுமின்றி;
இங்குளது என்றியம்பியிடும் ,, ,, ;
சொல்லியிடும் சொற்பொருளோர் அனுபவமின்றி,
சும்மாவே இருந்து மஹாமௌனியாகி;
அல்லுவில்லா அகண்டபரானந்தம் மேவி;
அநாதி பவதுக்கங்கள், அனைத்தும் தீர்ந்து,
க ல் லெ ன வே! திடமான பர ஞானத்தால்,
கற்பனையோர் அணுவுமில்லா(து) மு க் தி
சார்வாயே.

கருத்து :- சுற்று கவனமாக உரையும்.

தோற்றம் உண்டானால் இருப்பு உண்டு.
தோற்றம் இல்லையானால் இருப்பும் இல்லை.
காலம், தேசம், வர்த்தமானம், நாமம், ரூபம்,
குணம், குறி, மணம், ஆக்கு, காயம், ஆகிய
இப் பத்தும், இல்லாத நிலையில் கடந்த நிலையில்
காலாதீத பர சொரூபம், இல்லவே இல்லை.



ஆவல்!

அகண்ட பேரொளியாய்!

தான் தானாய்! தனித்த நிலையில்; அதை

உண்டு என்றே; இல்லை என்றே; வாக்கால்

சொல்லவோ! வழியால் விளக்கவோ!

மற்றொன்று! இவ்வாமையால்,

இல்லையென்ற நாமாவின்! பொருளும்

(தோற்றத்தின்)


உண்டு " ரூபத்தின்! பொருளும்

இவ்வாமையினால், அதன் அமைவமான,

வாக்கை மௌனமாக்கி! அதுவே நாமே! என்ற

அகண்ட பர உணர்வோடு! ஜீவன்முக்தராவாய்.

39




56

சந்ததம் நாம் பரப்பிரம்ம சொரூபமன்றி,
சற்றேனும் ஸம்ஸாரி அல்லவென்று,
இந்தவிதம் அறிவுற்று ஜலத்தில் சேர்ந்து அங்கு
ஏகரஸமாகின்ற லவணம் போல,
அந்தமில்லா அகண்ட பரப்பிரம்மத்தின்கண்,
ஐக்கியமே அடைந்த மனோவிருத்திதானே,
மைந்தா! அகண்டாகார விருத்தியென்று,
மாசற்ற ஞானிகளால் மதிக்கவாகும்.

கருத்து:- (A) மனோதாவவிருத்தி:- நான் ஒரு குடும்பி! என்ற ஸம்ஸாரி, நான் ஓர் ஜந்த ஜீவன்! நான் ஒரு ஆண்! நான் ஒரு பெண்! நான்! இன்னார்! இன்னார்! என தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வது மனோதாவவிருத்தி.

(B) அறிவின் சாட்சி விருத்தி:- தன்னை ரூபக வண்ண குழந்தையாகவும், நாமரூப ஜகம் நம்முடையதாகவும், திருஷ்டியில் மயங்கி காமம்,




மனதின் எண்ண விளைப்படி, அனைத்தும் ஒழுங்காக நடைபெறுகிறதென்ற, சமயாவனி! அறிவின் சாட்சி விருத்தியாகும்.

பேரறிவின் அகண்ட விருத்தி:- சமுத்திரத்தில் எப்படி, உப்பை காண முடியாதோ! ஆனால் எப்படி உப்பை! உணர முடியுமோ! அப்படி தாவாத்த பரசொரூப அம்சமே நாம் என, உணர்ந்த நிலையில், மேலே கூறிய, அவ்விரண்டையும் மனோ அறிவு! விருத்தி யென்று, அவற்றை தம்முள் அடக்கி இல்லாமல் பண்ணி, அதுவே நாம்! நாமே அது! என தாம் தாமாய் இருப்பது அகண்டாகார விருத்தியென, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

57 தேக முதல் நாம் என்னல் துவைத விருத்தி.
திகழ் சாட்சி நாம் என்னல் சாட்சி விருத்தி.
ஏகபரம் நாம் என்னல் அகண்ட விருத்தி.
இம்மூன்று விருத்திகளில் இரண்டை தள்ளி,

135




ஆகும் அகண்டாகார விருத்தி தன்னை,
அநவரதம் ஆதரவாய் அப்பியாசித்து,
சோகமுறும் சித்த விகற்பங்கள் தீர்த்து,
சொன்ன அகண்டைகரஸ சொரூபமாவாய்.

கருத்து :- (A) நாமரூப சரீராதிகள் அனைத்தும், துவைத விருத்தி! ஆகும். இவைகள் கட்டையில் வந்த கள்வன், என்ற மனோ விருத்தி ஆகும்.

(B) மேலே கூறிய இவை அனைத்திலும், சூட்சுமமாய்! இயங்குவது, அறிவின் மாயாசம்பந்தமாகும். இது விசிஷ்டாத்வைதம் ஆகும். இது அறிவின் சாட்சி விருத்தி ஆகும். இது கானல் ஜலமாகும்.


(C) ஜட சொரூபமோ! ஜீவ சொரூபமோ! இவை அனைத்தும், பிரம்மானந்த சமுத்திர ஜலமே! மேலே கூறிய, அனைத்திலும் உண்மையாய் மேல் சர்வாந்தர்யாமியாக இருப்பது! சர்வ சாட்சியாக, இருப்பது நாமே! அதுவே நாம்! நாமே அது! என அகண்ட பாவனையை! அடைந்து மனோ மௌனமாவாயாகு.




சர்வ மஹா மந்திரமும் உபதேசிப்போர்;
சாமான்ய குருவெனவே சாற்றலாகும்.
இருமையில்லா பரப்பிரம்மம் நீயே என்று;
இணையற்ற உபதேசம் செய்கின்றோனே;
பெருமை மிகும் ஸத்குருவென்று உரைக்கலாகும்.
பின் வெகுவாய் பேசுவதால் பெறும் பேறென்ன?
அரிய பரம் நீயென்போன் ஆசானவான்!
அகம் பிரம்மம் என அறிவோன் மாணவனாம்.

கருத்து :- ஏழு கோடி மந்திரங்கள் உண்டு என்பர். அதில் பஞ்சாக்ஷரம், ஷடாக்ஷரம், அஷ்டாக்ஷரம், பீஜாக்ஷரம், ஆகிய நான்கும் முதன்மையானவை. இப்படி மந்திரங்களை உபதேசிப்பவரும், மற்றும் வேறு மார்க்கங்களை உபதேசிப்பவரும் சாமான்ய குருவாகும். அத்வைதம் ஐயமின்றி உபதேசிப்பவரே ஸத்குரு ஆவர்! அதை அப்படியே சந்தேக கலக்க பயமின்றி! ஏற்று, அது நாம்! என அனுபவம் பெறுபவனே ஸத்சிஷ்யன்! ஆவான்.


137



59

பொருந்திட நிதம் செய்கின்ற சிரவணத்தால்
புகலும் அசம்பாவனை தான் முன்பு நீங்கும்.
வருந்திட நிதம் செய்கின்ற மனனம் தன்னால்,
வாளாவாம் சம்சய பாவனையும் நீங்கும்.
விரிந்து நிதம் செய்கின்ற நிதித்யாசத்தால்
விபரீத பாவனையும் நீங்கும் போதங்கு;
நிரந்தரமாம் பரப்பிரம்ம சாக்ஷாத்காரம்
நிச்சயமாம் தன்மனதில் நிகழுமன்றே.

கருத்து: (A) கற்கை நன்றே! கற்கை நன்றே!
கற்றலிலும், கேட்கை நன்றே. என்று
எம் வள்ளுவன். இப்படி கேட்பதே சிரவணம் ஆகும்.
நாம் படிப்பதிலும், ஒருவர் படிக்கவோ! அல்லது
குருதேவரோ! மஹாத்மாக்களோ! பேசும் போதோ!
அவைகளை கவனமாக காதால் கேட்பதே சிரவணம் ஆகும்.




இப்படி காதால் கேட்பதால், அஸம்பாவித
நிகழ்ச்சிகளாகத் தோற்றும், அனைத்து
காட்சிகளும் (நாமரூப நாடகம் அனைத்தும்)
மாறும். இயல்பாக படிப்படியாக மறையும்.

இதன் மூலகாரணம் :- சர்வார்ப்பணம்! ஆகும்.

இதுவே பொருந்தி! செய்வதாகும்.


(B) வருந்தி செய்வது மனனம் ஆகும் :- இதன் காரணம்
என்னதான் மனதை சாந்திசமாதானம் செய்தாலும்
படிக்க வழக்க தோஷத்தில், சிக்கிய மனம்
பொருந்துவதை ஏற்காது தான். இங்கு தான்
மன! உருக்கம்! ஏக்கம்! கண்ணீர் பெருக்கம்!
(நீ வாழ வரவில்லை. சாதிக்க வந்தவனே!)
என்றிட உறுதியோடு, வருந்தி!
மனன! அப்யாசம் செய்தால், மன அலைவான்
சந்தேகமும்! சஞ்சலமும்! நாசமாகும்.



139


ஓ சர்வார்ப்பணத்தால் தான் பொருந்த முடியும். இப்படி தடையற்ற அப்யாசத்தால் பொருந்தும் போது, மனம் சாந்தி! சமாதானம்! அமைதி! பெறமுடியும். இந்நிலை பெறும் போது, உன் ஸ்ரீ குரு அருளிய, பிரம்மார்ப்பணமே! அதாவது, எல்லாம் ஒன்றே! எல்லாம் மண்ணே! எல்லாம் பரமே! பரமாகிய நாமே! என விரிந்து செய்யும் நிலையாகும். இதுவே நிதித்தியாசம் ஆகும். இப்படி விரிந்து செய்யும் போது காலக்கிரமத்தில், உன் சாதனையை அனுசரித்து, விபரீதம்! விநோதம்! விசித்திரம்! விகற்பம் (தோற்றமாவன) எல்லாமே சர்வ நாசம் ஆகும். இந்நிலையில்,

ஆரம்பம் :- அனைத்து ஜீவ தோற்றங்களும்! நாமங்களும் சிற்பம் (பதுமைகள்) சித்திரம் (படக் காட்சி) ஆகுமாறும். பின் எல்லாம் மண்ணாகவே தோன்றும். பரப்பிரம்ம சாக்ஷாத்காரம்! இயல்பாகவே அமையும்.



ஸ்வயமதுவாம் தத்துவமஸி! என்னும் வாக்கியம்,
மஹா
சொல்லும் உபதேச வாக்கியமாகும்.
இயலும் அஹம் பிரம்மாஸ்மி! என்னும் வாக்கியம்,
இவரும் அனுபூதி மஹா வாக்கியமாகும்.
மயன்மருவா பிரக்ஞானம் பிரம்மம்! வாக்கியம்,
மனனத்தின் அப்யாச வாக்கியமாகும்.
அயமாத்மா பிரம்மம்! என்றதையும் வாக்கியம்,
அவைக்கெல்லாம் அம்சமாம் வாக்கியமாகும்.


கருத்து:— ஸ்ரீ ஸத்குருவின்! உபதேச வாக்கியமானது,
தத்த்வம் அஸி! (அதுவாகவே நீ இருக்கிறாய்)
என்பதாகும். இது அனுபவம் கூட வேண்டுமானால்,
அஹம் பிரம்மாஸ்மி (அதுவே நான்! நானே அது)
என்ற மஹா வாக்கியத்தால் அனுபவம் பெறமுடியும்.
அப்படி அனுபவம் பெறுவதற்கு, பிரக்ஞானம் பிரம்மம்
என்ற நிலையில்
உடல் உலக பிரக்ஞையை விடு. ஆத்ம பிரக்ஞையோடு
இரு என்பதாகும். இப்படி ஆத்ம பிரக்ஞையோடு கூடி,






உடல் உலக நாமரூப பிரக்ஞையை விட்டு,
பலகால, இடையறாத பயிற்சி முயற்சியால்,
குரு கிருபையினால்! அதுவாகவே ஆனபின்,
அயமாத்மா பிரம்மம்! என்று; யாம் அது
வா க வே இ ரு க் கி றோ ம்.
என்று; ஞான சபையின்! சம்மதத்துடன் அவன்
ஜீவன் முக்தனாகவே! ஆகிவிடுகிறான்.

61 முக்தியுற வேண்டுமென இச்சை செய்தால்;
மோக்ஷத்தின் பொருட்டே தன் உயிர்தரித்தல்,
(அது) பக்தியுடன் நன்றாக விசாரம் செய்தால்;
(அது) பாங்காக பரப்பிரம்ம ஞானம்! எய்தல்.
இத்துவைத ஜகத்தையெல்லாம் அற மறத்தல்;
இதனையும் பரமார்த்த தசையில் பொய்யே.
அத்வைத பரப்பிரம்மம்! ஒன்றே உண்மை.
அதுவே நீ! அணுவும் இதில் ஐயமில்லை.



கருத்து :- முக்தி அடைய வேண்டும் என இச்சை
கொள். அது பரமுக்தியாக இருக்க வேண்டும்.
பதமுக்தியாக இருக்க வேண்டாம். பக்தி
அவஸ்யம் பண்ணு. அது நிஷ்காம்ய பக்தியின்
ஆரம்பமாகி, ஜீவன் முக்தியில் முடிய வேண்டும்.
இவ்விரண்டையும், முறையோடு, அனுஷ்டிக்க
நாம ரூப ! ஜக ஜீவ ! தோற்றம் ! அனைத்தும்
மண்ணே ! மண்ணுக்கு அன்னியம் (எவரும்) எதையுமில்லை.
மண்ணாகிய பரமே ! பரமாகிய நாமே ! என உணர்ந்து கொள்.

62 மிகமிகவும் சப்தத்தை விரும்பி சொன்னால்,
மிகு வாக்கின் துக்கத்திற்கு ஏதுவாகும்.
புதல்பவவாம் சப்தத்தை பரிந்து கேட்டால்,
பொருந்தும் மனமயக்கத்திற்கு ஏதுவாகும்.
வெகுவிதமாம் அர்த்தத்தை விசாரம் செய்தால்,
விதவித மனோ துக்கத்திற்கு ஏதுவாகும்.
தருமகனே ! ஆதலினால் அனைத்தும் தள்ளி,
தற்பிரம்மம் தாமெனவே நிதித்தியாசியாய்.




143

கருத்து :- (1) பப் தார்த்தம் என்பது அடர்ந்த காடாகும். உள்ளே புகுந்தால், வெளியே வரமுடியாது. இயலாது. அதேபோல, ஒரு வார்த்தைக்கு, பல கருத்துக்கள்! மனம் விரும்பி சொன்னால் அது வாக்குக்குத் துக்கமே. அனுபவ அறிவாக இருந்தால் நலமாக முடியும்.

(2) ஒருவர் சொல்லும் மனைமய கற்பனையான வார்த்தைகளை! திரும்ப திரும்ப விரும்பிக் கேட்டால், மனைமயக்கம் சந்தேகம் கலக்க பயம் உண்டாகும். குருவாக்காக கேட்கும்போது, அனுபவ அறிவுபிரகாசிக்கும்.

(3) ஒரு வார்த்தைக்கு பல பல அர்த்தம் கண்டு கண்டு, ஒன்றுக்கொன்று, ஒப்பிட்டு பார்த்து, ஞா ன வி சா ர ணை! செய்தால், அம் மனம்பிரட்சியிறல் உணர்வு கெடும்! மனோ உணர்ச்சி! டென்ஷன்! எமோஷன்போன்ற கலக்கபயம் உண்டாகும். உங்கள்






ஆகவே எல்லாம் தன்னில்; உருவாக்கில்;
நிலைத்து நின்று, அதுவே நாம்! நாமே அது என;
அனுபவ அறிவில் நிலைத்து நிற்பாயாக.

63 புரையறவே உணர்பொருளை உணர்ந்தபின்னர்,
பூரணமாம் அப்பொருளின் சாக்ஷாத்காரம்,
மருவியிட நிதித்தியாசம்; செய்வதல்லால்.
மற்றிறையும் நூல்வழியே செல்லவொண்ணா.
தெரிபொருளை நூல்வழியால் அறிந்தபின்னர்,
தெரிவித்த நூல்மொழியையே மீண்டும்
(மீண்டும்) சொன்னால்
உரை தரும் தன்; வாக்குக்குத் துக்கம் என்றே,
உபநிஷத வசனமெல்லாம் உரைக்குதன்றோ?

கருத்து :- குறிப்பு :- முன்பல பல காலத்திற்கு
முன்பு பாடம்; படிப்பு; பட்டம்; பதவி; பணம்;
அந்தஸ்து; கௌரவம்; இவைகளின் நாகரீகத்தால்
ஒருவருக்கொருவர், போட்டி & பொறாமை; ஆகிய
இவைகளின் பின்னால் ஓடா; இல்லாமல் இருந்தது.
விளங்கு




145

பொறுமை! பணிவு! அன்பு! கருணை! கனிவு! ஈகை!
பெரியவர்களிடம், மதிப்பு மரியாதை! கல்வியில்
சிரத்தை! ........ நம்பிக்கை! ...... வைராக்கியம்!
பணிவினால் பெறும் மதிப்பு! மரியாதையின் கனவி
பரிபூரணமாக இருந்தது. ஆகவே ?????

ஒருமுறை கேட்டாலும் போதும்.
" படித்தாலும் " .
" பார்த்தாலும் " .
அது அப்படியே அனுபவ அறிவாகி! பதிந்துவிடும்.

ஆனால் இன்றோ?

ஔவையில் சொன்ன, பாடம்படிப்பு! பட்டப்படிப்பு! பதவிப்பணம்
போட்டி பொறாமையால்! மனத்திரை வலுவாகி!
அனுபவ அறிவை! நன்றாக மூடிவிட்டது இவைகளும்.
ஆகவே அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்.
என்ற பழமொழிப்படி! திரும்பத் திரும்ப! அப்பியாசம்
செய்யச் செய்யத்தான்! அக்கடின மனத்திரை!
நாசமாகும். இது வைத்தியம்.






ஆகவே இப்பாடலின் கருத்து முற்காலத்தில் பொருந்தும் இக்காலத்திற்கு, அடுத்தபாடல் கவனிக்கவும்.

64. ஆதலினால் தானியத்தை அடைந்த பின்னர்,
அங்குள்ள பதர்களை (தூர) எறிதலே போல்,
வேதமறு உணர்பொருளை உணர்ந்த பின்னர்,
இங்குற்ற நூலெல்லாம் எறிதல் வேண்டும்.
வாதகமாம் நூலெல்லாம் எறிந்த பின்னர்,
(சாதகமான நூல்) வருந்தியுமே அநவரதம் இடைவிடாமல்,
வோதுமூறு சாதகமாய் நிதித்தியாசத்தை,
புரியுடனே ஆரணமாய் படிதல் வேண்டும்.

என முடிக்கிறார்.


147



கருத்து :- முன் 5வது பாடலின் உட்கருத்து :-

புரையறவே :- (குற்றம் குறைநீக்கி) உணர வேண்டியதை, உணர்ந்த பின்னர், எல்லா நூல்களையும் தள்ளிவிடு, என்றும். பின் அதன்
(பாராயணம் வேண்டாம் என்றும்)
கருத்தை மட்டும் அனுபவம் கூட்டு. என்றும், மேலும் மேலும் படித்துக் கொண்டிருந்தால், வாக்குக்கும்! மனதுக்கும்! துக்கம் தான்! என்றும். வலியுறுத்தி, கூறப்படுகிறது. அதன் உட கருத்தை, 6-வது பாடலில், காண்க.


(1) தானியத்தை அடைந்த பின், பதர்களை தள்ளு என்றும், உன் அறிவின் அனுபவம் தரும் நூல், ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு, மற்றும் நீ படித்த, கேட்ட, அனைத்து நூல்களையும்! தள்ளி விடு. அவைகளை தொடாதே. என்பதே அதன் பொருள் ஆகும்.





② வேகமற! உணர்வொருமை உணர்ந்த பின்னர்:
வேத திருஷ்டியும்! அதனை விருப்பு வெறுப்பும்!
அதனை குற்றம் குறையும்! முழுமையாக
நீங்கும் வரை! உனக்கு அனுபவம் தந்த நூல்
ஒன்றை! மட்டும் பார் அதன் பாராயணத்தை
விடாதே.

③ வாதகமாம்! நூலையெல்லாம் அறிந்த பின்னர்:
உன் அறிவுக்கு அனுபவ நிலையால், ஏற்கும்
சாதகமான! நூல்மட்டும் வைத்துக்
கொண்டு.
வாதகமான! நூல்களை எல்லாம்
தள்ளிவிடு
ஒன்றைப் பற்றி! ஒன்றை மட்டும் உணர்ந்தால்!
சந்தேகம் வராது. வரமுடியாது. வர இயலாது.




(149)

இரண்டு இருந்தால் சந்தேகம் கலக்கமயம்
அவஸ்யம் உண்டு.

(4) போகமுற சாதகமாய் நிதிக்கியாசம் செய்
உன் சாதனை! முடியும் வரை!
பேதம் & விருப்பு வெறுப்பு & குற்றம் குறைநீங்கி
சாந்தி ஆகும் போது, மனம்! அறிவாகும்.
நாமரூபம்! அனைத்தும் பதுமைகளாகவும்! பின்
மண்ணாகவும் உணரும் போது! அறிவு பேரறிவாகும்.
அகம் பிரம்ம பாவனையின்! பாராயணம் வேண்டும்.
நாமரூபம்! அனைத்தும் பதுமைகளாக மாறும்
வரை, உன்றன் பாராயணம் பண்ண முடியும்.
எல்லாம் மண்ணாக உணர்ந்து விட்டால்,
உன்னால் பாராயணம் பண்ண முடியாது.
பண்ண இயலாது. சிரத்தையாய் கவனம் தேவை.


150



65

நினைக்கையில்போல் தோன்றிய இந்தநாமரூபம்;
நிகிலமுமே நீயலது வேறேயன்று.
தமக்கையில் போல் கனவிலுணர் நாமரூபம்;
தாமலது சோதிக்கின் வேறே உண்டோ?
எமக்கையில்போல் காண்பதெல்லாம் யாமேயென்றும்
யாம்தானே ஏகபரப்பிரம்மமென்றும்;
(உண்) மனக்கவலை யாவையுமே தீரும் மட்டும்;
மறவாமல் எப்போதும் நிதித்தியாசிப்பாய்.

கருத்து :- ஜக ஜீவ தாவராதி! தோற்றும் அனைத்து நாமரூபங்களும்! மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய யாமே! என உறுதிநிச்சயம் பண்ணு. கனவில் காணும், எல்லா நாமரூபங்களும் உனக்குள் தோன்றி! உன்னுள் விளையாடி! உன்னுள் மறைவது போல்! கண்ணில் காணும், அனைத்து நாமரூபங்களும், எம்முள் தோன்றி! இருந்து! விளையாடி! மறைகிறது! என உண்மையை, மனதிற்கு வாயாக.




66

இருக்கின்ற (து) இலங்குகின்ற (து) இன்பமென்றும்,
இயம்பியிடும் நாமமொடு ரூபமென்றும்,
தருக்கமிடும் இவ்வம்ச பஞ்சகத்தில்,
தயங்கிய மூன் மூன்றம்சம் பரத்தின் ரூபம்.
சுருக்க முறும் இரண்டம்சம் ஜகத்தின் ரூபம்.
சொற்பொருளாம் | இவ்வம்சம் இரண்டும் தள்ளி,
நெருக்கமுறும் ஸத் ஸித் ஆனந்தமாய் மீந்தும்,
நின்றபரம் நாமெனவே நிச்சயிப்பாய்.

கருத்து :- இப்பாடலில் முதலவரியில் வரும் இன்பம் என்ற வார்த்தையை, ஆனந்தம் என கொள்க. மேலும் ஏழாவது வரியில் வரும் ஸத் ஸித் சுகமாய் என்ற வாக்கியத்தை வேதாந்த கருத்தான ஸத் ஸித் ஆனந்தமாய்! என மாற்றி அமைத்த நிலையில் இனி விளக்கம் காண்க.


குறிப்பு :- இப்பாடலில் அந்த இன்பம்! என்ற வார்த்தையானது கவிதோஷ குறையாய் அமைந்தது இன்ப துன்பம், இரண்டும் இணைந்த நிலையில், நாமரூப, ஜக ஜீவ, நிலையின், ஜனன மரணம் ஆகும்.

152




இப்பாடலின் கருத்தை உணர்க. முதல் வரியில்,
காணும் மூன்றையும், ஸத் சித் ஆனந்தம்
என்ற நிலையில் விளக்கம் பெறுக. இம்மூன்றும்
பர சொரூப அம்சம் ஆகும்.
பின் இரண்டாவது வரியில் கூறுவது :-
இயம்பியிடும் நாமமொடு ரூபம் என்பது :-
சொல் விளக்கமாய் அமைவது நாமரூப ஜகஜீவ
தேவர்களாகும். ஆகவே கீழே கூறிய இரண்டை
தள்ளிவிட்டு, மேலே கூறிய மூன்றையும்! ...யும்
பர அம்ஸமாம் என, அனுபவம் கூட்டுவராக.

67 துவைதம் என்றும்; துவைதமொடு அத்வைதமென்றும்;
தூய பரமாத்ம துவைதம் என்றும்;
இவ்விதமென்றும்; அவ்விதமென்றும்; இவதுவீர
(விஷிஸ்டாத்வைதமென்றும்) தென்றும்;
இவை முதலாம் ஆங்காங்கே இயம்பவுற்ற;
விதவிதமாய் இவ்வுரை செய் வாதம் யாவும்;
விசாரிக்கின் விமல பரப்பிரம்மம் தானாம்.
நுவிகதுரு (அ)ப்பரப்பிரம்மம் அது நாம் என்று;
கோதறவே பாவித்து குறைவு தீர்வாய்.



கருத்து :- இன்றைய ஆன்மீக சாதனை நியாவி,
அனுபவ வாக்காக கூறுவதாவது :- துவைதம்!
என்றும்; அத்வைதம்! என்றும்; தெய்வீகமாகிய
(பரமார்த்திகம் அல்ல) பரமார்த்தம் (ஸம்சு) நியாயாகிய
பரமாத்ம துவைதம் (விஷிஷ்டாத்
துவைதம்) என்றும்; இது அது! இங்கே அங்கே!
என்ற வாதப்பிரதிவாதம் ஏலீ வாம்! உண்மையில்
மலமற்ற பரப்பிரம்மம் என்றும்; அதுவே நாம் என்னும்
அனுபவம் கூடுவோமாக.

68 அகண்ட பரிபூரணமாம் பிரம்மம் தானே,
அறிவற்றோர்க்கு உலகெனவே தோற்றிடினும்,
புகன்ற பலவிதமான உலகம் தானே,
பூரணமாம் அறிஞர்க்கு பரமாய் தோற்றும்.
நிகழ்ந்ததிரே இருக்கின்ற ரட்சு தானே,
தெரிவற்றோர்க்கு! அரவெனவே தோற்றிடினும்,
நிகழ்ந்ததரவே தெரிவுற்றோர்க்கு! ரட்சுவாக,
நிகழ்கின்ற நீதியினை கண்டோமன்றே!




குறிப்பு :- விஷிஸ்டா; துவைதம் :- இது மாயா சம்பந்த துவைதம்! ஆகும் என உணர்க.

துவைதம் :- இது நாம ரூப குண பேத சம்பந்த (மயக்க) துவைதம் ஆகும் என உணர்க.

அத்வைதம் :- இது பரமாத்ம (ஈச) நிலை அல்ல. பாரமார்த்திக (பரசொரூப) நிலை ஆகும் என உணர்க.


கருத்து :- இனி 64 வது பாடலின் கருத்தாவது: ஏகசிந்நாட்ட இடமில்லாமல் நீக்கமற நிறைந்திருக்கும் பிரம்மமானது, மனத்திரை மூடியவர்களுக்கு நாமரூப/ஜகஜீவ! குணசம்பந்த தோஷ உலகாய் தோன்றும். அறிவுடையவர்களுக்கு/தோஷ குண பேதமற்ற, பதுமைகளாக தோன்றும். பேரறிவு! உடைய அறிஞர்களுக்கு! குணாதீத சுத்த மண்மயமான/பரமாகவே தோன்றும். (ரஜ்ஜு சர்ப்பம் போல, அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய். என்பது போல) மனமுடையவர்க்கு நாமரூப உலகம் தோன்றும்.



69

நிச்சலமாய் உணர்வுற்று நிறைந்து நிற்கும்
நிலையதுவே கைவல்ய மோக்ஷம் ஆகும்.
துச்சமில்லா அந்த நிலை தொடர்ந்தோரெல்லாம்,
துன்பமுறார்! துக்கமறுவார்! சுகமே சார்வர்!
எச்செயலும் செய்து முடித்தவரேயாவர்.
அவர் எப்போதும் ஏகபரவடிவாய் நிற்பர்.
அச்சுக பரவடிவான அன்னோர்க்கிங்கு,
உளபவ விகார விவகாரம் ஒன்றுமில்லை.

கருத்து :— நாமரூப, ஜக ஜீவ, அனைத்து தோற்ற மயக்க, கலக்க, பயமற்ற (எல்லாம் மனதை உணரும்) நிலையே ஜீவன்முக்தி ஆகும். இதை வாய் ஞானமாக, இல்லாமல் ஸ்வயமான அனுபவம் பெற்றவரே, அவர் வந்த காரியத்தை முடித்தவராவர். அவருக்கு ஆவரண மயக்கமும், விக்ஷேப கலக்கமும், அற்ற அகண்ட ஏக பரவடிவாகி நிற்பவராவர். அவருக்கு இனி இங்கு, பவபாச விகார விவகாரம் இல்லை.




156

70

தன்சொரூப நிலைமருவாது அலைவோருக்கு,
தளர்வுதரும் பவபந்தம் தவிர்வதெங்ஙன்?
என் செயினும் (தன்) சொரூப நிலையடையாதோர்க்கு,
எண்ணுறும் பவபந்தம் இறவாதென்றும்.
சஞ்சலமில்லா பாவனையே செய்வோருக்கு (மட்டும்)
சலமனதின் விகல்பமெல்லாம் தீர்வதாலே,
அஞ்ஞானமாம், ஆவரண விக்ஷேபங்கள்.
அனைத்துமில்லா சொரூபநிலை அணுகுமன்றே.

கருத்து:- தன்னை அறியும் அறிவை அறியாதோர்க்கு, சந்தேகங்கள், கவலை பயம், தொலையாது. அவர் வேறு எந்த சாதனை புரிந்தாலும் அது சாதனை ஆகாது. அது சோதனை வேதனையாகத் முடியும். தன்னை அறியும் அறிவை அறிந்தோர்க்கே மனம் அழிந்து, மனம் மறைந்தாகும். இந்த நிலை பெற்றவர்க்கே, நாமரூப, ஆவரண மயக்கம் நாசமாகும் அதனால் தோன்றும், விக்ஷேபம் என்னும் மயக்க குண தோஷமும் நாசமாகும்.




**71**

ஸத்குருவின்! சந்நிதியில் ஓர்ந்த வண்ணம்;
ஸாதுக்கள் சகவாசம் செய்தங்கங்கே;
நிர்க்குணமாம் பரப்பிரம்ம சொரூபம் தானே;
நிதிவருமாம். அதுவே நாம். அதுவே உண்மை.
அக்ஷரமாம் பிரம்மமதே வேதாந்தங்கள்.
அனைத்திற்கும் பொருளாகும் என்றிவ்வண்ணம்;
தக்க பரநிர்ணயமே திடமாய் செய்தல்;
தளர்வையெல்லாம் தவிர்க்கின்ற விசாரமாமே.

கருத்து :— ஸத்குரு தேவரின்! கிருபையினால் நடைபெறும், பாராயணங்களிலும்; ஸத்ஸங்கங்களிலும்; அனுபவ நிலையில், கேட்டுணர்ந்த, ஸத்திய அனுபவ வாசகங்களை! அது சம்பந்த அன்பர்கள்! மற்றவர்களிடம் தெளிவு பெறாத சபையில் மட்டும்! விளக்கி தெளிவு பெறுவராக.


குறிப்பு :- ஏனையோரின் தெளிவு! தெளிவு ஆகாது. சந்தேக குழப்பம் உண்டாகும்; என அறிக.



அப்படி அன்பர்களிடம் பெறும் ஞானி நிலையே.
பிரணவ ஓம்கார! வேதாந்த அத்வைதம் ஆகும்.
இந்த உறுதி நிச்சயமே! அனைத்து நாமரூப!
ஜக ஜீவ! தோற்றம்! அனைத்தும் மண்ணாக!
உணரும் நிலையாகும். மண்ணாகிய பரமே!
பரமாகிய நாமே! நாமாகிய பரமே என ஆகுக.


**72**

சுருதியென்றும், ஸ்மிருதியென்றும், நூல்களென்றும்,
சூட்சுமமாம் வேதாந்த நூல்களென்றும்,
கருதும் இதிகாசமென்றும், புராணமென்றும்,
காமிகமே முதலிய ஆகமங்களென்றும்.
ஒருமையென்றும், இருமையென்றும், ஒன்றுமில்லை
உள்ள தெய்வமாம் அகண்ட பரப்பிரம்மம் தானும்.
பரவிய அப்பரப்பிரம்மம் நாமே என்றும்
பாவித்து! பாவித்து! பரமேயாவாய்.
கருத்து :- வேதம்! சாஸ்திரம்! புராணம்!
இதிகாசம்! ஆகமம்! சூட்சும மந்திரங்கள்!



இப்படியாக வெளாக்கீதத்தையும்! தெய்வீகத்தையும்!
இணைத்து பிணைத்து, முடிவில் தெய்வீகமே!
ஆக்கும், அனந்த கோடி நூல்களும்; அத்வைத
உபதேச வேதாந்த நூல்களும்; இவை யெல்வும்
கூறும், இருமை என்றும்; ஒருமை என்றும்;
ஒருமை என்றும்; இருமை என்றும்; இவ்விதம்
வாதப் பிரதிவாதம்! செய்கின்ற அனைத்து
போதகங்களும்! இவை போதிப்பவையே!
சாதிப்பவையல்ல. அதாவது போதனை! சாதனை!
வேதனை! சோதனை! என்ற பேதாபேதங்களையும்!
வாய் ஞானமில்லாமல்; அனுபவ ஞானமாக்கி,
ஊசி நாட்ட இடமில்லாமல், எல்லாமாய்
பரவியிருக்கும் பரப்பிரம்மம் ஒன்றே ஸத்தியம்
பரவிய அப்பரப்பிரம்மம் நாமே! நாமே அது!
என பாவித்து! பாவித்து! பாவனாதீத நிலை பெறுவாயாக.


160



73

சித்தம் அல்லால் பிரபஞ்சம் என்றுமில்லை.
சித்தம்தான் பிரபஞ்சம் எனவே தோற்றும்.
சித்தம் அல்லால் ஸம்ஸாரம் என்றுமில்லை.
சித்தம்தான் ஸம்ஸாரம் எனவே தோற்றும்.
சித்தமதை சோதிக்கின் ஸித்தே ஆகும்.
ஸித்தான! சித்தமதே! சிவமாய் நிற்கும்.
சித்தம் இல்லா; ஸின்மயமாம்; சிவம் நாம் என்றே
சிந்தித்து! சிந்தித்து! சிவமே ஆவாய்.

கருத்து:- நாமரூப கற்பனையால், ஒரு எண்ணமே வருவது மனமாகும். அப்படி வரும், ஒரு எண்ணத்தை பலஅர்த்த தோற்ற பாவனை பண்ணுவது புத்தியாகும். அப்படி புத்தியால் தோன்றும் பல அர்த்த பாவனை எண்ணங்களையும் (நாமரூபகுணதோஷங்களை) இவைதான்! என உறுதி நிச்சயம் பண்ணுவது சித்தம் ஆகும்.






ஸத், ஸித், ஆனந்தம்! என்பதில் ஸத் என்றால்
அசையாத பரம் ஆகும். ஸித் என்றால் அசையாத
பரத்தை/ அசைய வைக்கும், ஸத் அம்சமாகும்.
அப்படி அசைய வைக்கும் ஸித்! அசையும் நிலையில் சித்தம்
ஆகும்.

அந்த அசைவை ஸித்தாக உணர்ந்தால் ஆனந்தம்.
,, ,, சித்தமாக ,, இன்பம்.
ஆனந்தம்/ பேரானந்தம் - பிரம்மானந்தமாக நிறைவதும்.
இன்பம்/ இன்பதுன்ப/ ஜனனமரணமாக/ தொடர்வதும்.

ஸித்தே! சித்தமாகிறதேயன்றி/ சித்தம் என,
தனியாக இல்லையென உணர்க. ஸித் என்ற உணர்வு
நிலையில், ஸம்ஸாரம் என்பதில்லை. சித்தம் என்ற
உணர்ச்சி நிலையில், ஸம்ஸாரம் உண்டு என அறிக.

குறிப்பு:- ஸம்ஸாரம் என்றால், கடல் எப்படி அலைகளால்
ஜீவ ஜந்துக்களை அசைக்கப்படுகிறதோ அதைப்போல் சித்தமும்
எண்ண அலைகளால், இன்பதுன்பமாய் அசைக்கப்படுவது
ஸம்ஸாரம் ஆகும்.


162



அப்படியானால், கிரமமாக சொல்லும் மனம்! புத்தி! சித்தம்! என்பவை இல்லவே இல்லை என்றும், ஸத்தே! விளையாட்டின் நிலையால், ஸித்தாக அசைகிறதேயன்றி, சித்தம்! என்பது இல்லவே இல்லை; என உறுதி நிச்சயம் பண்ணு! சித்தம் இல்லாமையால், எல்லாமே ஸின்மய சொரூபமே! ஸத்தாகிய பர சொரூபமே என ஸத்தின் நிலையில் சிந்தித்து! சிந்தித்து! சிவ பரமாகி சும்மா இரு.


74 மனதை அல்லால் ஜகமுதலோர் அனுபவியில்லை.
மனதுவே ஜகமுதலாய் தோற்றவாகும்.
சொனமனது ஸங்கல்ப வடிவே யாகும்.
சோதிக்கின் ஸங்கல்பம் ஸித்தாய் தீரும்.
மனதுடைய ஸங்கல்பம் ஸித்தாய் தீர்ந்தால்,
மனதுதான் ஸின்மயமாம் சிவமே ஆகும்.
ஜனன மரணமில்லா ஸின்மயமாம் சிவம் நாம் என்றே,
சிந்தித்து! சிந்தித்து! சிவமே ஆவாய்.

163



கருத்து :- மனம்! புத்தி! சித்தம்! இம் மூன்றும் ஒன்றே.
மனதின் மற்றோர் விளக்கம் :- குற்றம் குறை!
கற்பனையாகும் என உணர்க.


நாமரூப! ஜக ஜீவ! அனைத்து தோற்றங்களையும்
இந்த மனமானது, இன! ஜன! குண! தோஷ!
கற்பனையால், தமக்குத்தானே, உண்டுபண்ணிக்
கொண்டு, காரசாரமாக விளையாடுகிறது. மன
தின்! இவ் விளையாட்டு இலீலையாயின் உலகம் இல்லை
இங்கு வேதாந்த கருத்து! என்ன சொல்கிறதென்றால்
(மனதின்) ஸங்கல்பமே உலகம்! ஸங்கல்ப ரஹிதமே மோக்ஷம்!
இம்மன எண்ணத்தை, நாமரூப குண பேதமாக (என்கிறது).
காணாமலும், கேளாமலும், பேசாமலும், எல்லாம்
ஒன்றே! (பிரம்மமே) அபிரமமே! ஸத் சித் ஆனந்தமாக
விளையாடுகிறதேயன்றி; இன்ப துன்ப மயக்கம் இல்லை.
என்று உணர்ச்சியை கெடுத்து; உணர்வோடு இருந்தால்,
அதுவே நாம்! நாமே அது! என்று ஸித்தன் நிலையால்.
சிந்தித்து! சிந்தித்து! சிவ (பிர)ம்மமாகி சும்மா இரு.



75


சின்மயமாம் எம்மிடையே மனது உதித்து.
சின்மயமாம் எம்மிடையே மற்றும் இருந்து.
சின்மயமாம் எம்மிடையே அடங்கவாவே.
சின்மயமாம் எம்மையல்லால் மனதே இல்லை.
சின்மயமாம் எம்மையல்லால் மனதில்லாததால்.
சின்மயமாம் எம்மையல்லால் எவையுமில்லை.
சின்மயமாம் நாம் என்றும் சிவமே என்று.
சிந்தித்து! சிந்தித்து! சிவமே ஆவாய்.

கருத்து. இப்பாடலின் முக்கிய கருத்தாவது:—
நாமரூப தாவக் காட்சிகள்! அனைத்தும் மண்ணே. அம்மண்ணின் சூட்சும இணைப்பும்! பிணைப்பதும்! சூட்சுமமாகிய மாயா & மனம். அம்மண்ணான்! நிழலே மாயாவாகும். அம்மாயாவின் மகனே! மனமாகும். இவைகளை வைத்து உணரும்படித்து. மண்ணாகிய பாரும்! ப(த்தின்)மறு இயக்க வடிவான மாயாவும் & மனமும்! அன்றி வேறு எதுவும் இல்லை. என்பதே சத்தியமாகிறது. அதாவது,




மண்ணாகிய பரம் & மாயா & மனம் / ஆகிய இம்
மூன்றும் யாமே! யாமே இம் மூன்றும் ஆவோம்.
அப்படியானால் இம்மனம் எம்மில் தோன்றியது.
,, ,, ,, விளையாடியது.
,, ,, ,, மயமாகிவிட்டது.
எம் விளையாட்டின் நிமித்தமாக, தோன்றும் மாயாவும்,
,, ,, ,, இயக்க மனமும்;
எம் அம்சமாகவே இருப்பதால், எம்மையன்றி எதுவும்
இல்லையென்பதே சத்தியம். எம் சத்தாகிய சித்தை!
சிந்தித்து! சிந்தித்து! சிவ(பர)மாகி சும்மாயிரு.


76 சின்மயமாம் எம்மையல்லால் சங்கல்பத்தின்
செயலான ஜகத்தோற்றம் எதையும் இல்லை.
சின்மயமாம் எம்மையல்லால் சங்கல்பத்தின்
செயலான ஜீவேஸ்வரர் யாரும் இல்லை.
(ஜீவன் & ஈசன்)
சின்மயமாம் எம்மையல்லால் சங்கல்பத்தின்
செயலொன்றும் ஒருகாலும் இவ்வே இல்லை.
சின்மயமாம் நாம் என்றும் சிவமே என்று
சிந்தித்து! சிந்தித்து! சிவமே ஆவாய்.



166

கருத்து :- முன் பாடலின் அனுபவ கருத்தை! வைத்து உணர்ந்தால், எப்படி விளங்குகிறது என்றால் :- எம் மன! இன! ஜன! குண! தோஷ பேதம் இல்லாமல்! உண்டாகும் மன எண்ணமும், அறிவின்! உறுதியின் ஸ்திரத் தன்மையும், ஆகிய இவ் விரண்டின் இ ணை ப் பே! நாமரூப ........ ஜகஜீவ ......ஈஸ்வராதிகள்! அநித்யம் என உணர்ந்து, எல்லாம் சிவமே (பரமே) என, சிந்தித்து! சிந்தித்து! சிவ (பர) மாகி சும்மா இரு.

77 சின்மயமாம் எம்மிடையே கனவில் கண்ட,
ஜகமுதவாய் எமக்கயவாய் இவைகளே போல்,
சின்மயமாம் எம்மிடையே நனவில் கண்ட,
ஜகமுதவாய் எமக்கயவாய் என்றும் இல்லை.
சின்மயமாய் நாம்தானே என்றும் ஒன்றாய்,
செறிந்த சிவ பூரணமாய் சிவமாய் நின்றோம்.
சின்மயமாய் நாம் நாமாய்! நின்றோம் என்று,
சிந்தித்து! சிந்தித்து! சிவமே ஆவாய்.






கருத்து :- முன்பாடல்களில் ஓர்ந்துணர்ந்து,
அனுபவம் பெற்ற நிலையில், எம் கனவில்
தோன்றியதும், எம் நனவில் யாம் தேடியதும்
எமக்கு அன்னியமாய் எங்கும்! எதுவும்!
எவரும்! இல்லவே இல்லையென, ஸத்தியமாய்
உணர்ந்தோம். ஆகவே நாம் நாமாகவே!
இருக்கிறோம் என்ற, ஸ்வய அநுபவ பரிபூரண
நிலையில்; அதுவே நாம்! நாமே அது! என
அகண்ட பர வடிவாகவே! எல்லாம் சிவமே (பர) என
சிந்தித்து! சிந்தித்து! சிவ (பர)மாகி சும்மா இரு.

78 அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்ம ஞானம்.
அதிதிடமாம் விவேகத்தால் ஜனிப்பதாகும்.
அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்ம ஞானம்.
ஆசிரியன் கருணையினால் கிடைப்பதாகும்.
அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்ம ஞானம்.
அநவரதம் பழக்கத்தால் உறைப்பதாகும்.
அகம் பிரம்மம் என்றுணரும் ஆத்ம ஞானம்.
அகண்ட சிவம்! கருணையினால் நிலைப்பதாகும்.


168



கருத்து :- அகம் பிரம்மம்; ஜெகம் பிரம்மம்; அகமே எல்லாம்.

ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை. என்ற, ஸ்ரீ ஆதி பரமஹ ஞானிகளின்! அனுபவ நிலையில் அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்! அதாவது அதுவே நாம்! நாமே அது! என்ற ஆத்மஞானம், நாமரூப ஜக ஜீவ தோற்றம் பொய் என்ற விவேகத்தாலும். அந்த ஒன்றே ஸத்தியம்! அதுவே நாம் என்ற ஸத்குரு கருணையாலும்; தைலதாரையேபோல், அதுவே நாம் என்ற பழக்கத்தாலும்; பணிவாலும்! பொறுமையாலும்! உள்ளம் பள்ளமான தன்மையாலும்; பரகருணை! பிரவாகமானது! உன்னை அரவணைத்து ஏற்று கரைத்து! கலந்து விட்ட தன்மையாலும்; கிடைப்பதாகும். வாய் ஞானம் இல்லாமல்; அனுபவ ஞானமாகி; அதுவே நாம்! நாமே அது! என சும்மா சுகமாய் இரு.


169



**79**


அகம்பிரம்மம்! ஜகம்பிரம்மம்! அகமே எல்லாம்!
என்ற;
வசனத்தை சப்தத்தால் உரைப்பதற்கோர்;
வருத்தமில்லை. ஆதலினால் அசத்தரெல்லாம்;
நிஜவடிவின் பாவனையில் மறைந்தின்று;
நிச்சயமாய் அநுபூதி நிலைக்குமட்டும்;
பிசகறவே சர்வமுமே பிரம்மமென்றும்;
பிரம்மமதே நாம் என்றும்; நாம் அதுஎன்றும்;
அசலமதாம் அகண்டான்ம சொரூபம் தன்னை.
அறிவிக்கும் சப்தத்தை, உரைக்கவேண்டும்.

கருத்து:- அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! அகமே எல்லாம்! என்ற அகண்ட பரபாவனையை வாக்கால் சொல்ல, எந்த கஷ்டமும் இல்லை. இந்த பரபாவனையை! மனம் அசைவற்று மஹத்தாலெவ்வரை தைவதாரை போல், சொல்லவேண்டும். உன் யதார்த்த சொரூபத்தில், உண்மையில் நின்று விட்டால் நீ வந்த காரியம், முடிந்து முக்தியாகிவிடும் உறுதி




மாரணமில் அறிவான பிரம்மமல் லால்;
மாயை இல்லை. அவித்தை இல்லை. மற்றொன்றில்லை.
சீரணமில் அறிவான பிரம்மமல் லால்;
ஜீவனில்லை. ஈசனில்லை. ஜகத்துமில்லை.
ஆரணமாம் அறிவான பிரம்மமல் லால்;
பொய்யுமில்லை. மெய்யுமில்லை. பிரிவொன்றில்லை.
காரணமாம் அறிவான பிரம்மமல் லால்.
காரியமாய் காண்கின்றது எவையுமில்லை.


கருத்து:- எந்த மறைப்பும் இல்லாத பிரம்மம் ஒன்றே ஸத்தியம். மறைப்பை உண்டுபண்ணும், மாயாவோ! மனமோ! இவையே இல்லை. கெட்டுப் போகாத பிரம்மம் ஒன்றே ஸத்தியம். தோன்றி, இருந்து, மாறி, மறையும் ஜீவனோ! ஈசனோ! ஜகமோ! இவையே இல்லை. பரிபூரணமான, பிரம்மம் ஒன்றே ஸத்தியம். உண்டு என்றும், இல்லை என்றும், சொல்லும் எந்த நாமரூப பொருளும் இல்லை. அனைத்திற்கும் ஆதாரமான ஆதரவான! காரணமான பிரம்மம் ஒன்றே ஸத்தியம். காரிய சொரூபங்களான, எந்த நாமரூபங்களுமில்லை.




பிரம்மமதே மும்மூர்த்தி எனவும் தோற்றும்.
பிரம்மமதே ஸ்ரீவசிவம் எனவும் தோற்றும்.
பிரம்மமதே ஐம்பூதம் எனவும் தோற்றும்.
பிரம்மமதே அனந்த உலகு எனவும் தோற்றும்.
பிரம்மமதே சராச்சரமாய் தோற்றவாகும்.
பிரம்மமதே சகலருமாய் தோற்றவரும்.
பிரம்மமல்லாது ஒருபொருளும் என்றும் இல்லை.
பிறங்கியிலும் பொருளெல்லாம் பிரம்மம்தானே.

**கருத்து :-** காலாதீத பர சொரூபமே, பிரம்மம் ஆகும். பரப்பிரம்மமே, காலாதீத பர சொரூபம் ஆகும். அக்காலாதீத பரப்பிரம்மமே, லோக கர்த்தாக்களாகிய, மும்மூர்த்திகள் ஆகும். அப்பரப்பிரம்மமே, ஆதி ஸ்ரீவ சதாசிவமும் ஆகும்.
” கோடானுகோடி கோள்களும், சூரிய சந்திராதிகளும் ஆகும். அப்பரப்பிரம்மமே, அசைவன அசையாதன, அனைத்தும் ஆகும். கண்ணால் காணும் அனைத்து நாமரூபங்களும், அதுவே ஆகும். அது இல்லாமல், எதுவும் இல்லை. அதுவே நாம் என உணர்.


172



82

சகலமுமாம் இவை வேறு! நாம் தாம் வேறு!
சற்பிரம்மம் வேறு! என்றெண்ணும் பேதபுத்தி,
எப்படி நீங்கும் என்றால்?
அகிலமுமே அகண்ட பரப்பிரம்மம் என்றும்,
அதுதானே நாம் என்றும், நாம் அது என்றும்,
வெகுதிடமான அகண்டபரநிச்சயத்தால்,
வேறாகவே எளிதாக நீங்கும் அன்றி,
இகழ்வுதரும் கரும உபாசனை யாவொன்றும்,
இயம்பிய இப் பேதமதி எளிதில் நீங்காது


கருத்து :- நாமரூபசம்பந்த, ஜக ஜீவ! சொந்த பந்த, பாச, தோற்றங்கள்! அனைத்தும், வேறுவேறு இவைகள், காண்கின்ற, கேட்கின்ற, இவைகள் பற்றி பேசுகின்ற நாம் வேறு வேறு, வேதாந்த கருத்துக்களின்படியும்



173

அத்வைத பிரம்மத்தை ! வேறு ! (வேறு) என்ற பேத
வேற்றுமையானது ! எல்லாம்
மண்ணாகிய பரமே ! பரமாகிய நாமே ! நாமாகிய
பரமே ! என்ற கலங்காத திட உறுதி நிச்சயத்தால்,
மட்டும்
எளிதாக சூரியனைக் கண்ட பனிபோல் நீங்குமே யன்றி ;
வேறு எந்த, கர்ம உபாசனையாலும், நீங்கவே நீங்காது.


82 அகம் பிரம்ம நிச்சயமே அகத்தில் உள்ள.
அஞ்ஞான சந்தேகம் அனைத்தும் போக்கும்.
அகம் பிரம்ம நிச்சயமே அகத்தில் உள்ள;
அனேக விதவிபரீத தோஷம் நீக்கும்.
அகம் பிரம்ம நிச்சயமே ஆன்மாவின் கண்;
அசஞ்சலமாய் அமர்கின்ற சமாதிநல்கும்.
அகம் பிரம்ம நிச்சயமே பதிபந்தங்கள்;
அணுவுமில்லா அபரோக்ஷ ஞானம்நல்கும்.



174

கருத்து :- அகம்பிரம்மம்! பிரம்மம் அகம்! அகமே என்ற, அகண்ட பரபாவனையால் மட்டும், எல்லாம் (என்னாம்) மனதினில் தோன்றும் அனைத்து (பார்வையால்) சுகதுக்கபய சந்தேகங்கள் நீங்கும். மனதினில் தோன்றும் விபரீத! விசித்திர! விநோத! விகார! காட்சிகள் அனைத்தும் நாசமாகும். மனம் மனத்தனைநிலையில் ஆன்மசகஜசமாதியில்! அனுபவம் கூடும். மணம்பின்னவாகிய, கணவன் & மனைவி! சொந்த பந்த, உறவை நாசம் செய்து, நாமரூப மயக்கத்தை கெடுத்து, எல்லாம் மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நானே! என்ற ஆத்மானுபவ ஞானத்தை கொடுக்கும்.

குறிப்பு :- முன் ஜன்ம சுகிர்தத்தால், சர்வார்ப்பணம் பூர்த்தி ஆகி இருந்தால், பிரம்மார்ப்பண பயிற்சி முயற்சியினால், இவ்வனுபவம் கூடும் என உணர்க.




84

(பிரம்மன்)

சிவன் என்றும், ஹரி என்றும், விரிஞ்சன் என்றும்,
சிருஷ்டி என்றும், ஸ்திதி என்றும், நாசம் என்றும்,
தவம் என்றும், ஜபம் என்றும், தீர்த்தம் என்றும்,
தானம் என்றும், தெய்வம் என்றும், சேவை என்றும்,
கவருகின்ற மயக்கங்கள் ஒன்றுமில்லை.
களங்கமில்லா பிரம்மம் எல்லாம் | அதுநானே என்றே,
அவமற்ற உறுதியினால் அகண்டம் தன்னில்
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.

கருத்து:— திரிகர்த்தாக்களாகிய பிரம்மன் | நாராயணன் | சிவன் | என்றும்; அவர்களுடைய முத்தொழில்கள் என்றும்; ஜபதபங்கள் என்றும், தீர்த்தம் க்ஷேத்திர ஸ்தலங்கள் என்றும், தான தருமம் என்றும்; எலிப்பொறி போன்று உன் மனதை கவர்கின்ற, மயக்கங்கள் ஒன்றுமில்லை. இந்த மயக்கங்களின், நாம ரூப | பேதமற்ற, முன்னாகிய பாதமே! பரமாகிய நாதமே! நாமாகிய பாதமே! என அசைவற்ற சகஜ சமாதி கூடுவையாக.




176

85

பல விதமாம் மந்திரமும் தூரத் தள்ளி,
பஞ்சமஹா அக்ஷரமும் தூரத் தள்ளி,
இலகிய அஷ்டாக்ஷரமும் தூரத் தள்ளி,
இவை ஓதும் குருவையுமே, தூரத் தள்ளி,
நிலைமருவா வசன மெல்லாம் தூரத் தள்ளி,
நிகழ்த்தியிடா மௌனமுமே, தூரத் தள்ளி,
அலைமனதின் விகற்பங்கள், அனைத்தும் தள்ளி,
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாயே.

கருத்து :- சாற்றிக்கிடக்கும் ஏழு கோடி, மந்திர(மும்)ம் என்ன கண்டாய்? என ஓர் ஸ்ரீமஹாத்மா பாடியுள்ளார். இதனைவைத்து உருவிட்டு அனைத்து மந்திரங்களையும், இதை ஓதும் குருவையும், மனதை மயக்கும் எல்லா வார்த்தைகளையும், அக எண்ண மௌனத்தையும், பார்ப்பது, கேட்பது, பேசுவது, தொட்டு காட்டுவது, இவைகளின் கற்பனை குற்றம்குறை உணர்ச்சிகளையும், நாசம் செய்து, எல்லாம் மறந்த நிய பரமே, பரமாகிய நாமுள்ள அசைவற்ற சகஜசமாதி அடைவாயாக.




177

86

காமமொடு கோபமுதல் அனைத்தும் தள்ளி,
கர்வமுடன் டம்பம் முதல் அனைத்தும் தள்ளி,
லோபமருவு மோஹமுதல் அனைத்தும் தள்ளி,
துவைதமொடு அத்வைத முதல் அனைத்தும் தள்ளி,
நாமமொடு உருவமுதல் அனைத்தும் தள்ளி,
நாம் பிறர் என்ற இவை முதலாம் அனைத்தும் தள்ளி,
ஆம் அல்ல என்று அறிவுற்றது! அனைத்தும் தள்ளி,
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.


கருத்து:- காமக் குரோதம் என்ற ஆறு குணங்களை நாசம் செய்து, அஹங்காரம் & டம்பம் (ஆடம்பரம்) இவைகளை நாசம் செய்து, சந்தேகம் & மோஹமென்ற இவைகளை நாசம் செய்து, அவன் & அவள்! இவள் & அவன் இது அது! அது இது! இது ஒன்றா! இது இரண்டா! என்ற நா ம ரூ ப! அ வி ம ண கட ன்! விகாரத்தின்! விவகாரம்! அனைத்தையும் நாசம் செய்து சிவமாம் மணியாகிய பரமே! பரமாகிய நாமமே! நாமமாகிய பரமே! என அசைவற்ற சகஜசமாதி கூடுவாயாக.



87


நிரந்தரமாம் அறிவான எம்மிடத்தில்;
நிகிலமுமே கற்பிதமாய் தோற்றவாவே;
பொருந்திய அக்கற்பிதமாம் தோற்றமெல்லாம்;
பூரணமாம் அறிவான அகமே என்றும்;
விரிந்த அறிவான அகம் பிரம்மமென்றும்;
வேறற்ற அபேத பர ஞானத்தாலே;
அருந்தவனே! பேதமதி அனைத்தும் தள்ளி;
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.

கருத்து :- சாஸ்வதமாயும்! இயல்பாகவும்! நிரந்தரமாகவும்! ஒருவான அறிவான! எம்மிடத்தில் எம் கற்பிதமான! இந்த நாமரூப! உலகம் தோன்றியது. அனைத்து நாமரூபமும் எம்மண்ணையன்றி அன்னியமாயில்லை. ஆதலே வேறு வேறாக! எண்ணும் எண்ணத்தையெல்லாம் எம்மண்ணாகிய பாக்கிறேன்! அன்னியமாய் இல்லைவாம் என்றும் நாமரூப விகார விவகாரம்! அனைத்தும் நாசம் செய்து; எலவாம் மண்ணாகியபரமே! பரமாகிய நானே! நானாகிய பரமே! என அசைவற்று! சகஜசமாதி கூடுவாயாக




ஸத்தியமாய் ஜகத்து முதல் இருக்குமாகில்,
துலனமற சுருதியிலும் இருக்க வேண்டும்;
அத்தனையும் சுருதிதனில் இல்லையாகவே,
இவை யாவும் கனவெனவே மித்தையென்றும்,
நித்தியமாய் நின்ற அகம் பிரம்மமென்றும்,
நிர்மலமாம் அபேத பர ஞானத்தாலே,
அத்திரமாம் பேதமதி அறுத்தும் தள்ளி,
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.


கருத்து:- இந்த நாம ரூப ஜகம் உண்மையில் இருக்கிறது என்றால், அது உறக்கத்திலும் இருக்க வேண்டும். அது எம் உறக்கத்தில் இல்லை. மற்றவனுக்கு இருக்கிறதே, என கேட்கலாம். மற்றவனுக்கு இருந்தால், எமக்கு என்ன பிரயோஜனம்? யாம் தூங்கும் நிலையில் அப்படியே, ஒரே தூக்கமாக தூங்கிவிட்டால், இவ்வுலகம் இல்லாதது தானே? எம் தூக்கத்தில் இல்லாத உலகத்தை, எப்போதும் இல்லை யென்றே தள்ளு.



180

அதாவது அந்த நாம ரூப! ஜகஜீவ! தோற்றம்!
எம் எண்ணத்தினால், இருப்பதைப்போல் தோன்றி,
,, ,, நிகழ்வதைப்போல் நடந்து,
,, மறப்பினால்; எல்லாம் மறைந்து விடுகிறது.
அப்படியானால், தோற்றம்! இருப்பு! மறைவு!
ஆகிய இம் மூன்றும், எம் முன்னே யே, இருப்பதால் இவை
எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! நாமாகிய
பரமே! என அசைவற்ற சகஜசமாதி கூடுவாயாக.


39 மனதுடைய விருத்தி உதிப்பதற்கு முன்னும்,
மற்றந்த விருத்தி நசித்திட்ட பின்னும்,
தினையளவும் இல்லாத (இச்) ஜகஜீவாதி,
இயங்கும் மனோ விருத்தியினால் மத்தியத்தில்,
கனவது வாய்! இருப்ப தெனத் தோற்றினாலும்,
களங்கமற சோதிக்கின் இல்லையென்றே,
அனைய மெல்லாம் அத்யந்த நேதி பண்ணி,
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.



181

கருத்து:- விபரம் அறியா, பச்சைக் குழந்தைக்கு!
மனவித்து போடப்பட்டிருக்கிறது. ஆனால் முளைக்கவில்லை.
ஆகவே, ம னோ வி ரு த் தி! இல்லை. (விருத்தி என்றால் தோஷ ஞானம்)
வயது முதிர்ந்து, இயலாத் தன்மையில், ம னோ
வி ரு த்தி ம்! பட்டுப் போனது. மத்தியில்
வாலிப வயதில் மனோ விருத்தம் எ ண் ண
வி ரு த் தி யி ன் ல்! கர்மபவன் தருகிறது.
முன்னும்! பின்னும்! மனோ விருத்தி இல்லாமையினாலும்
வாலிப வயது! என்ற மத்திய காலத்தில் மட்டுமே
கர்மா பற்றுக்கவரவு! நிறைவு பெறுவதனால்;
அதுவும் கனவாய் முடிந்துவிடுகிறது. இதன்றியும் எம்முள்
நடைபெறுகிறதே யன்றி, எமக்கயலாய் இல்லவே இல்லை.
ஆகவே எல்லாம் மனமாகிய பரமே! பரமாகிய நாமமே!
நாமமாகிய பரமே! எனஅசைவற்ற சகஜ சமாதி கூடுவாயாக.

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி நிறைய கர்ம பலத்தினை கொடுக்கிறது.




182

89 வதுபாடலின் உட்கருத்து.

(1) ஒருசிசு பிறந்த நாள் முதல், 3 வயது வரை மனமில்லாது | போட்டது முளைக்கவில்லை. 3 To 8 வரை | முளைத்த இரண்டு இலை மட்டுமே தெரிகிறது. அது இன்ன மரம் என்றோ, இன்ன செடி | யென்றோ, இன்னவன் (புண்ணிய பாவம்) என்றோ, தெரியாது. அந்த எட்டு வயதிற்குள் மாதா | பிதா | உறவு | சுற்றம் | நட்பு | என்ற ஐந்தின் வயது நிலையில், ஆண ஐண மனவிருத்தி | என்ற நிலையில்,


மனோதோஷ | கலியண்வகர |

குணங்கள் | உ ற ம் & ஐ வ ம் | என்ற நிலையில், உ ள ட் ட ப் பு ட் டு | அச்செடியோ | மரமோ | வளர ஆரம்பிக்கிறது. அச்சிசு | ஏற்று வந்த, கர்ம பலனை | அனுசரித்து, உளட்டப்பட்டும், விளையும் பயிர் முளையிலேயே | என்ற நிலையில், 8 வது வயதில் தெ ரி யு ம். ஆனால் ப ல ன் த ரா து. மேலும் ஓர் நான்கு வருடம் (12 வயது வரை) அச்சிசுவின், பாடம் | படிப்பு | பட்டம் | பதவி | இவற்றின் பணம் |



183


இவைகள் **முன்வினையின்**, அடிப்படையில்,
நிர்ணயிக்கப்படும். இப்பன்னிரண்டு வயது வரை,
அக்குழந்தைக்கு :- செயல் திறன் பிராரப்தத்தின்படி,
நடைபெறும். வேறு எந்த புண்ணியபாவங்களும்,
அச்சிசுவை, சேராமல் **மாயா**, பாதுகாக்கும்.
ஆனால் இன்றைய காலத்தில், 8 To 10 வயது வரைதான்,
இந்த பருவத்தில் இவை, குறைக்கப்பட்டு விட்டது.
அப்புறம் இது படிப்படியாக, படிப்படியாக, பருவம் என உணர்க.
(12) வயது முதிர்ந்து, இ ய லா த் த ன் மை யி ல்
அம் மனமரம், பலன் முடிந்து, பட்டுப்போய் விடுகிறது.
பின் அம்மனதால், சேகரித்த வினையும், ஆதி மூட்டை
யாகிய, சஞ்சிதத்தின், கணக்கையும் சேர்த்து
அம்மனமே, ஓர் தாபம் எடுக்கிறது. இக்காரியத்
த்திற்கு, **விதியே** (காலதேவனே) உடனிருந்து
செயல்படுகிறது. வாலிப வயதில் அம்மனமே திரு கூடிக்
கோடி, யுகம், எண்ண விருந்தியானால். கர்மபலன்தருகிறது
அதைத்தான் **ஆடி அடங்கும்**, வாழ்க்கையடா,
என்றோர்கள் போதும்.



184


3) 10 To 60 வயது (50 வருஷம்) வரை/வாலிப
வயதாகும். இங்குதான், மனம் கட்டுக்கு அடங்காமல்,
தோஷ குண வேகத்தில் செயல்படும்.
சாதகனானவனுக்கு, அவன் மனம்/அவன் வசப்படும்.
சாமான்யனை/ மனம் அவனை தன் வசப்படுத்தி கொள்ளும்
கர்மாவின் பெருக்கமும்! கர்மாவின் நீக்கமும்!
இந்த வயதில்தான் முடியும்/ முன்னும்/ பின்னும்/ முடியாது.
மனம் வினையை சேர்க்கும். அவ்வினையை விரட்டி முடிக்கும்.

90) கடமட வென்று உணர்வற்ற உபாதை நீங்கில்,
கடமின்னும்/ மடமின்னும்/ ஒன்றே போல,
மடமை முதல் ஜீவ பர உபாதி நீங்கில்,
மாசற்ற ஜீவ பரம்/ இரண்டும் ஒன்றென்று,
திடமுறவும் உணர்த்தால் பரஜீவ ஐக்கியம்,
இயல்புதனை இருமையற/ அறிந்து அதனில்,
அடரும் அகண்டாகார சொரூபமாகி,
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.



கருத்து :- கடவிண் (குடவிண்) = அனித்தியசரீரங்களிலும்! உள்ளே, வியாபகமாக இருக்கும், ஆகாயம்.
மடவிண் = எங்குமாய்! ஏகமாய்! சர்வ வியாபகமாய்! வெளியே பரவியிருக்கும் ஆகாயம். இங்கேயும்
ஆகாயம் இரண்டும்! ஒன்றே. ஆதலின் குடம் எனச்
சொல்லும், நாமரூபமே! உபாதை (பேதம்) ஆகும்.
(கடம் = குடம்) உதாரணமாக சொல்லும் நியாயத்தில்,
ஜீவன் = குவளி! பரம் எனச் சொல்லும் ஈசன் = குடம்.
குவளியும் குடமும் தான்! பேதமே தவிர, உள்ளே உள்ள
ஆகாயத்தில், பேதம் இல்லை என உணர்ந்து, ஆகாயம்
என்ற பரமே நாம் என அசைவற்று சகஜசமாதி கூடுவாயாக.


(91) சிவோஹம் எனச் சொல்லியிடும் வாக்கியத்தில்,
சோதித்து விருத்தாம்சம் நீங்கும் போது அங்கு.
ஆயஜக ஐக்கியமே அறியும் அர்த்தம்.
அவ்விதமே தத்வம் அஸி! வாக்கியத்துள்,
ஏகமதாம் விருத்தாம்சம் அனித்தியம் நீக்கி,
இயல்பான ஐக்கியமே அறிந்து அதனால்,
ஆயமனே பேதமெல்லாம் இழந்து எப்போதும்,
அசஞ்சலமாய் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.



கருத்து :- சிவம் + அகம் = சிவோஹம். இதன்
பொருள் நானே சிவம். சிவமே நான்! என்பதாகும்.
இதைப் போலவே தத்வம் அஸி! என்றவாக்கியமும்
அதுவாகவே நீ இருக்கிறாய்! நீயாகவே அது இருக்கிறது.
என்பதாகும். இதன் சாதனையாவது.

(A) ஆய ஜக ஐக்கியம் வேண்டும் :- ஜக ஜீவ
தோற்றம் அனைத்தும், எந்த நாம ரூபமும்! அந்த
மண்ணே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என்ற
நினைவால், எல்லாம் ஒன்றாக்கி ஐக்கியப்படுத்துவதாகும்.

(B) ஆய மனை பேதம் வேண்டாம் :- இது இன்னது!
இது இன்னார்! இது இதனால் ஆனது! இது இன்னதைச் செய்யும்
என்ற நினைவால், நாம ரூப! குணம் குறி! என்ற
பேத பாவனையின் மனம் வேண்டாம். இப்பேதப்பார்வை
யால், குண தோஷம் பின்ன பிரிவதால், மனதால்
விளையும்! விளைவால் ஜனன மரணமும் உண்டாகும்.
ஆகவே ஆய ஜக ஐக்கிய நினைவால், எல்லாம் மண்ணாகிய பரமே!
பரமாகிய நாமே! என அசைவற்ற சகஜமாகி கூடுவாயாக.




92

கற்பிதமாம் ஜீவ, பர உபாதி எல்லாம்;
களங்கமற விசாரித்து நேதிசெய்து;
தற்பத லக்ஷியமான பிரம்மரூபம்.
த்வம்பத லக்ஷியமான நானே என்று;
நிர்பயமாய் அகண்டார்த்த போதம் பெற்று;
நீக்க வொண்ணா பவபந்தம் அனைத்தும் போக்கி;
அற்பமில்லா அகண்டார்த்த வடிவேயாகி;
அநவரதம் ஆன்மாவில் அமர்ந்து நிற்பாய்.


கருத்து:— மனோ நாமரூப கற்பிதம் ஜீவ உபாதி. அறிவின் மாயா சொரூப கற்பிதம் பர உபாதி. என்ற ஈச உபாதி ஆகும் இவ்விரண்டுமே, கற்பனையே என்று உண்மை இல்லை. இதை வைத்து நீ கூறும், கீழ் இரண்டு அடிகளையும் கவனிக்கவும்.

தற்பதம் :— பரநிலை யென்ற ஈசநிலை. அதாவது மாயா சம்பந்தம் கொண்ட பரமாத்ம நிலை ஆகும். இது கூடஸ்தவும் (அளவில் கொஞ்சம் அதிகம்) மாயாவும் ஸ்ரீபகவான் என்ற கூடஸ்தம் இதன் உபாதை யென அறிக.



த்வம்பதம்:- (பந்த) ஜீவநிலை. அதாவது மா
வசம் (பிடியில்) அகப்பட்ட பந்த ஜீவன் ஆகும்.
(ஆணவ ஆத்மாவே) இது ஓர் குவளை ஜலம் ஆகும்.
(அளவில் கொஞ்சம் குறைவு) குறைவு / நிறைவு /
எல்லாம் வாக்கியார்த்தமே. லக்ஷியார்த்தம்
அல்ல. லக்ஷியார்த்தத்தில் / ஜலம் இரண்டும் ஒன்றே.
இது மனதாலும் / நாமரூப தாவத்தாலும் / பந்தம் /
என்ற, பிணியால் வந்த உபாதை ஆகும். ஆகவேதான்
தற்பத லக்ஷிய / பரமாத்மாவையும் த்வம்பத
ஜீவாத்மாவையும், உபாதி பேதங்களை / நாசம்
செய்து. இ ர ண் டு ம் ஒ ன் றே /
என்ற சகஜ ஐக்கியநிலையில் / உணர்ந்து. அ ஸி
பத லக்ஷியமான / தாதாத்மியபரமும் ஒ ன் றே /
என்று அகண்ட பரபாவனையில் மயமாகி
இடையறாது எந்த விநாடியும், பரமேநாம். நாமேபரம்.
என அசைவற்று, சகஜ சமாதி கூடுவாயாக.


உ. உபதேசம், ஞானம், கேள்க, கேள்க, கேள்க



93

சேத்தியமாய் செறிவுற்ற தோற்றம் யாவும்
ஸின்மாத்திரமான பரசிவமே என்றும்
வேத்தியமோர் அணுவுமில்லா சிவம் நாம் என்றும்
வேறற்ற நாம் அந்த சிவமே என்றும்
சாத்தியமாம் பாவனையால் அகண்ட போதம்
சார்ந்ததனால் ஸம்ஸார பாசம் நீங்கி
நேத்திரமாம் பரமசிவ அபின்னமான
நின் ஆன்மமாத்திரமாய் நிலைத்து நிற்பாய்

கருத்து :— கண்டும், கேட்டும், தொட்டுணரும், அனைத்து நாமரூப தோற்றமும் ஸத்தாகிய பரமே! என்றிட உணர்வில், எந்த சந்தேக கலக்க பயமில்லாமல் அனைத்து நாமரூப தோற்றங்களும் மண்ணே! (மண்ணுக்கு அன்னியமாம் எதுவுமில்லை) மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! நாமாகிய பரமே! என்ற உ ண் ! ஆ ண் மை ! நிச்சயத்தில் அ க ண் ட ப ர பா வ னை யா து நிலைத்து நிற்பாயாக.




190

94

மனது முதல் அனைத்திற்கும் அதீதமாகி!
மாயை மகதாதிகட்கும் அதீதமாகி!
நனவு முதல் அவஸ்தைகட்கும் அதீதமாகி!
நாமம் உரு எவைகட்கும் அதீதமான,
அதை பரப்பிரம்மம் அவ்வால் அனுபவிவில்.
அறிவதுமே அகண்ட பரப்பிரம்மமென்றும்,
தன அறிவாம் பரப்பிரம்மம் நானே என்றும்,
தவங்காத பாவனையால் மனதை வெல்வாய்.


கருத்து:— இருப்பில் வரும் மனதிற்கும் அதீதமாகியும்,
ஓர் தோற்றமும்! அதன் இருப்பை! மற்றும்
காட்டும், மாயாவுக்கும், அதீதமாகியும்,
அண்ட, ரண்ட, பிண்ட, பிரம்மாண்டங்களும்,
அனைத்து ஜீவ கோடிகளும், தாவர வர்க்கங்களும்,
ஆகிய அனைத்து, நா ம ரூ ப ங் க ளு
க்கும்! அதீதமாகியும், நனவு! கனவு! உறக்கம்!



ஆகிய இந்த மூன்று, அவஸ்தைகளுக்கும்;
அதீதமாகியும்; அதாவது இவை கூறிய
நான்கிற்கும்! ஆதாரமாக! ஆதரவாக!
ஆகாரமாக! அமைந்த அந்த ஒன்றே!
தாவாதீத பரம் ஆகும்.
எல்லாம் மண்ணே! மண்ணாகிய பரமே! பரம்
ஆகிய நாமமே! நாமமாகிய பரமே! என்ற அகண்ட
பரபாவனையால், மனோநாசம் அடைவாயாக.


**95**

சுத்த ஸிதாகாயமதாம் நிஷ்பிரபஞ்ச
சொரூபத்தில் பிரபஞ்சம் என்றும் இல்லை.
அத்துவைத பிரபஞ்சம் பரமார்த்தத்தில்,
இறையனாவும் இவதேனும் விவகாரத்தில்;
ஸித்தினுடைய, விவர்த்தமதாம் சித்தம் தாமே,
செறிகின்ற பிரபஞ்சம் எனவே தோன்றும்.
(எம்) புத்திரா! அச்சித்தத்தை(யாம்) புகன்ற வண்ணம்;
பூரணமாம் பாவனையால் நாசம் செய்வாய்.




192

கருத்து:— காலம்! தேசம்! வர்த்தமானம்! மனம்!
வாக்கு! காயம்! நாமம்! ரூபம்! குணம்! குறி! ஆகிய
இந்த பத்தும்! கடந்ததான; அதாவது இல்லாததான;
ப ர மே! ஸத்தியம். ஸ த் தி ய மே பரம்.
அப்படிப்பட்ட, (உவமானமேயன்றி உண்மையில் எப்
பிரயோஜனம் அற்ற, அகண்ட பாவனை மண்ணே
அப்பர சொரூபம் ஆகும். அப்பர சொரூபத்தில்
இந்த பிரபஞ்சமாகிய, நாமரூப! ஜக ஜீவ! தோற்றம்!
முக்காலமும் இல்லை! யென்பதே ஸத்தியம்.
ஆனால் அ ம் ம ண்! இல்லாமல் இத்துவைத! (பாண்டங்கள்)
நாமரூப! ஜக ஜீவ! (தோற்றம் இல்லை என்பதே ஸத்தியம்.
அதாவது:
அம்மண் இல்லாமல்! பா ண் ட ங் க ள் இல்லை.
அ ம் ம ண் ணி ல் ,, ,, ,, ,, ,, ,, ,,. இல்



193

மேலும் எம் ஸ்ரீபு மஹாத்மா! ஓர் ஸத்திய
வாஸகத்தை போடுகிறார். அது யாதெனில்?
இறையளவும் இல்லை. (என்றும்) ஆனால் விவகாரத்தில்!
மட்டும் உண்டு எனப் பேசப்படுகிறது. (ஆனால் உண்மையில் இல்லை)
இறையளவும்! என்றால் ஓர் கம்பி அளவும்! அதாவது
ஓர் ரோமக்கணு அளவும்! இல்லையென பொருள்.
மற்றோர் நிலையில், இறையளவும்! என்றால்?
திரிகர்த்தாக்கள் என்ற ஸ்ரீபகவான் (இறை)
அளவியும் இல்லை என உணர்க.
வேதாந்த/அரிய கருத்துக்கள்! சொல்வதாவது?
ஸங்கல்பமே உலகம். ஸங்கல்ப ரஹிதமே மோக்ஷம்!
இந்த நாமரூப, ஜக ஜீவ, உலகமானது, வி வ கா ர
ஸ த் தி ய ம். ஆகும். உண்மையில் இல்லை.
பேசிப் பேசியே! பேசிப் பேசியே! பேசிப் பேசியே!
இல்லாத உலகை! உண்டு என நம்ப வைக்கிறோம்.
நம்புகிறோம். உண்மையில் (ஆனால்) இவ்வுலகம் இல்லை.



194

அதுவாகவே இருக்கிறது.

பரம்! ஒன்றே உண்டு. அதை கண்டாருமில்லை

சொல்வாரும் இல்லை. ஏற்றுக் கொள்வாரும் இல்லை.

ஆகவே எம் அரும் ஞானப்புதல்வனே! அ பீ

ப ர ப் பி ர ம் ம ம்! நானே! என்றும்,

நானே அது! என்றும், சந்தேக, கலக்க, பயமற்று!

ப ரி பூ ர ண மா ன! ப ர பா வ னை

யா ல், ம னோ நா ச ம் செ ய் க!!!

96 இருமை இல்லா சுரூபத்தினில் ஏகமாக,

இருக்கின்ற ஆன்மாவே தம்மிடத்தில்,

மருவியிடும் (மாயா) சக்தியினால் கனவின்கண்ணே,

மனமுதலாய் தோற்றியிடும் நீதிபோல,


ஒருவழிவாய் உள்ளபிரம்மம் தானே, (மாயாவினால்)

ஒன்றிய தம் சக்தியினால் விசித்தம் போலவாய்,

ச ர் வ ஜ க, ஜீ வ ப ர, வ டி வ மா க,

(உண்) சஞ்சலமாம் விவகார நிலையில் தோன்றும்.


(உண்மையில் இல்லை)



195

கருத்து :— நனவில் கனவின் பொருள்கள் இல்லை
கனவில் நனவின் பொருள்கள் இல்லை. நனவில்
பொருள்களை, நாம் தேடிப்போகிறோம். கனவில்
பொருள்கள், நம்முள்ளேயே தோன்றிமறைகிறது
பொருள்கள் நம்முள்ளேயே, தோன்றிமறையும்
காரணம் :— நம்முள் உள்ள, சைதன்ய
ஆன்மாவுடன், நம்மனம் சேர்கிறது என அறிக.
(ஆனால் கலந்து மயமாக வில்லை.)

இருவர் சேர்ந்து இணைந்தால், மூன்றாவது
ஒன்று, எப்படி உண்டாகுமோ! அதேநிலையில்,
ஆன்மாவும், மனமும், சேர்ந்த நிலையில்,
நம்முள்ளேயே, கனவின் நிலையில் நாமரூப,
(ஜீவதேகேந்திரங்கள்)
பொருள்கள், இயல்பாகவே, தோன்றுகிறது
இது ஆன்மாவும், மாயாமனமும், சேர்ந்தநிலையில் தோன்றும்
அது
கனவின் சிருஷ்டி, ஆகும்.




9 வேதபாடலின் ரகஸ்ய குறிப்பு.

நம் ஆத்மாவும்! நம் மனமும்! நாம் தூங்கும் போது, சேர்வதால், கனவின் பொருள்கள்! தோன்றி மயக்கி மறைகின்றன. இதன் காரணம்:-

பகல் காலங்களில், இம்மனம்! ஆகமிய கர்மா வசம், நாமரூப வஸ்துக்களின், மோஹத்தால் எண்ணங்களில் விருத்தி! செய்வதே காரணம் என உணர்க.

இம்மனம், பகல்காலங்களில், கர்மாக்களை பண்ணும் போது, சர்வார்ப்பண நிலையில்! உறுதியாகவும்! சிரத்தையாகவும்! நம்பிக்கையாகவும்! பரிபூரண வைராக்கியமாகவும்! செய்தால், நாம் தூங்கும் போது, நம் மனம்! எண்ணங்களை இழந்து விடுகிறது. அங்கு மாயா! அவ்வெண்ணங்களை மறையச் செய்துவிடுகிறது. ஆகவே அக்காலங்களில் சுகமாக தூங்கும்; தூக்கம்! இயல்பாகிறது.

சர்வார்ப்பணம்! சரியில்லாமல், கனவு உண்டு என அறிக. கனவற்ற தூக்கமே, சுகமான தூக்கம் ஆகும்.






இதேபோல், காலாதீத பரசொரூபமும்!
மாயாவும், இணைந்து பிணைவதால்;
மண்ணும், ஜலமும், சேர்ந்து, எப்படி களிமண் ஆன
நிரியாகிய ஈசன், சிருஷ்டி எப்படியோ அப்படி,
நாமரூப! ஜகஜீவ! தோற்றம் & தாவர வர்க்கங்கள்!
இயல்பாகவே! தோன்றுகின்றன என உணர்க
இப்படி தோன்றுபவை, மனதால் குணதோஷம் பின்னை
பிட்டு, வாக்கால் பேசி; விவகார ஸத்தியமாகிறது.
உண்மையில் இல்லை.

**97**


அகம் பிரம்ம பாவனையால் மாயா மோஹம்;
அகிலமுமே நசிக்கும் இதில் ஐயமில்லை.
அகம் பிரம்ம பாவனையால் மனக் கிராந்தி,
அகிலமுமே நசிக்கும் இதில் ஐயமில்லை.
அகம் பிரம்ம பாவனையால் ஆதி & வியாதி;
அகிலமுமே நசிக்கும் இதில் ஐயமில்லை.
அகம் பிரம்ம பாவனையால் அத்யாசம்;
அகிலமுமே நசிக்கும் இதில் ஐயமில்லை.




கருத்து :— அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்!
அ க மே ஏ வ் வா ம்! என்ற ப ர
பா வ னை யா ல்! மாயா மோஹத் திரையும்!
மன முடிச்சுகளும் (மன குண தோஷங்களும்)
சஞ்சிதம் & ஆகாமியம்! ஆகிய இருவினைகளும்;
பிராரப்தம் அனுபவித்து தீர்ந்து விடுகிறது.
சந்தேக! காங்க! கலக்க பயமும்; இவை அனைத்தும்
சர்வநாசமாகி! அதுவாகிய நீ! இருப்பாய்! இது ஸத்யம்.


98

சர்வமுமே பிரம்மமெனப் போதித்தாலும்.
சந்ததமும் சுருதிமுடிப் படிப்புற்றாலும்;
பரம சிவம்! கருணையில்லா வெறும் மூடர்க்கு;
பவகால வாதனையால் மீண்டும் மீண்டும்;
இருமையென இதயத்தில் தெரிவதின்றி.
யாவையுமே பிரம்மமெனத் தெரிவதில்லை.
அறிவனே! ஆதலினால் முடிச்சு வெளியாம்.
அகண்ட பரசிவ கருணை! அடையவேண்டும்.




கருத்து :- பலபல காவ்ய சாஸ்திர, வேத, புராண, இதிகாச, கதைகளை படிப்பதனாலும், கேட்பதனாலும், வேதாந்த கருத்தின் ரகஸ்யத்தையும், பலர் வாக்கால் கேட்டாலும், படித்தாலும், மனம் அறியாது. ஜீவன்முக்தியும் இல்லை. அங்கு ஸ்ரீ பகவான் கருணை பெறவேண்டும். ஸ்ரீ பகவான் கருணை பெறவில்லையானால், இருமை ஒழியாது. "ஒருமை" நிலை பெறாது. அத்வைதம் நிலைக்காது. ஸ்ரீ பகவான் கருணையால், வினைப் பிராரப்தமும், ஸ்ரீ சத்குரு கருணையால், வினையும் மனமும் நாசமாகி ஜீவன் முக்தி உண்டு.


**99** அகம் பிரம்மம் என்று உரமாய் நிச்சயித்து.
ஆக்கை முதல் அகம் என்னும் நினைவைத் தள்ளு.
ஜகம் பிரம்மம் என்று உரமாய் நிச்சயித்து,
ஜகத்தை யெவ்வாறு உண்மையென்னும் நினைவ
அகம் பிரம்மம்! ஜகம் பிரம்மம்! என்றிவ்வண்ணம் தேர்ந்து.
அநவரதம் தொடர்பாக நிச்சயித்தால்.
ஜகம், பரம், நான்! என்னும் மும்மையால்
செறிகின்ற மயக்கமே ஸ்வயமாய் நீங்கும்.
இப்பாடலின் கருத்தை 202 பக்கம் பார்க்க.



200


98வது பாடலின் இறை & பரகருணையின் விளக்கம்.

இறை கருணை என்பது யோகமாயா சம்பந்தம்
கொண்டதாகும். இதன் இயக்கம் மனமும்
அதன் குணமும் பின்னிப்பிணைந்ததால்
உண்டான, வினையின் தாவு
இயக்கமாகும். இதன் இயக்க கர்த்தா
என்பவர், இயக்கமற்ற பரசொரூப ஆன்மாவாகும்.
இவர் ஸ்ரீபகவான் என அழைக்கப்படுகிறார்.
ஆனால், இப்பகவானவர், இயக்கமற்றிருந்
தாலும். இவர் நிழலாகிய, யோகமாயா
இயங்கிக் கொண்டு, அக்காரியத்தை
காரணமாகிய ஸ்ரீ பகவான் செய்ததாக நம்பவைக்கிறது.
இந்த காரிய இயக்கம் சாதகர்களுக்கு
வினையை முடிக்க அனுகூலமாக இருக்கும்.
இந்த காரிய இயக்கம் சாமான்யர்களுக்கு
அனுகூலமாகாது. இயல்பான இன்ப துன்பமாய்
முடியும் தொடரும். சாதகர்களுக்கும் இக்
காரிய இயக்கம், இல்லாமல் வினை முடி
வுற்று நிறைவுறுது என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.



201


பரகருணை! என்பது யோகமாயா! சம்பந்தம்
கொண்டதாகும். இதன் இயக்கம், அறிவின்!
ஆரம்பமும்; பேரறிவின்! நிறைவும் ஆகும்.
இங்கு மா அம்ச ஸ்ரீ ஸத்குருவே! இடம் பெறுகிறார்.
மனமும்! குணமும்! பின்னிப் பிணைந்து! நாமரூபமே!
ஜக ஜீவ! தோற்ற; மயக்கமான
தை! பிரம்மம் ஸத்தியம்! ஜகத் மித்தை!
என்ற, ஸத்திய வாசகத்தை கொடுத்து, அச்
சாதகனின் மனதை! அவன் மனம் அறியா வண்ணம்
யோகமாயாவின்! கருணையால், மேலே செலுத்தி
அம்மனதை! அறிவாக்கி! அவ் அறிவை!
பேரறிவாக்கும்! பக்குவத்தை, அதிரகஸ்யமாக
செய்து முடிக்கிறார். தூங்கும் குழந்தைக்கு
அக்குழந்தை அறியா வண்ணம், தாய் அமுதூட்டுவது போல்
இதுவே பரகருணை! என ஸ்ரீ மஹான் தாராஸ் பேசுகிறார்.
விநோதம்! யோகமாயா சம்பந்த ஸ்ரீ பகவானாகும்.
மந்திரம்! யோகமாயா சம்பந்த ஸ்ரீ ஸத்குருவாகும்.



கருத்து :- நாம் உடல் அல்ல. நாம் பிரம்மம்!
என்ற உறுதி நிச்சயத்தில், நிலை பெறுவாயாக.
நாமரூபமாக தோன்றும்! ஜகஜீவ! அனைத்து தோற்றமும்.
முன்னாகிய பரமே! பரமாகிய நாமே!
என்ற உறுதி நிச்சயத்தில் நிலைபெறுவாயாக.
இந்த உறுதி நிச்சயம்! தைலதாரை போல்!
அனுபவநிலையில் இருந்தால், தூங்குபவன்
கையில் உள்ள, பழத்தை! அவன் கையைவிட்டு
அவன் அறியாமலேயே நழுவிவிடுமோ? அதே போல்
இந்த நாமரூப! ஜகஜீவ! தோற்றம், உன்னைவிட்டு
அகன்று மறைந்துவிடும் (உனக்கு மட்டும்)

(100) வானமுதல் பூதமில்லை! புவனமில்லை!
(இதை) வகுக்கின்ற சக்தியில்லை! ஜீவனில்லை!
நானும் இல்லை! நீயும் இல்லை! யாரும் இல்லை!
நாமம் இல்லை! ரூபம் இல்லை! யென்னும் எல்லாம்.
ஞானகனமான பரப்பிரம்மமென்றே.
ஞானநிலை பெறும்அளவும் நிச்சயித்தால்,
பாணனும் தேகமயல் பாதவத்தின்
பக்குவத்தின் பழமைதனிலே ஸ்வயமாய் நீங்கும்.

இப்பாடலின் கருத்தை 204 பக்கம் பார்க்க.





ஜகம்! பரம்! நாம்! என எண்ணும் எண்ணம்!

அயர்ந்து

துயில்வோன் கையில் தெறிகின்ற மலர் போல்.

ஸ் வ ய மா யி நீ ங் கு ம்.

(A) ஜகம்:- நாமரூப சம்பந்த! உறவு! சுற்றம்! நட்பு! மற்றும் பணம் & பாண்டம்! மற்றும் கொடுக்கல் வாங்கல் சம்பந்த அனைத்து பொருள்களும்


(B) பரம்:- மாயா பிறவி! வடிவம் தாங்கி, ஆகும் செயலாற்றுவதைப் போல், பாவனை செய்கின்ற, தே வ

தெ ய் வ ங் க ள் ஆகும்.

ஆனால்

(C) நாம்:- நாம் ஆத்மாவே. மனத்திரை மூடிய தன்மையினால், நான் ஓர் பந்த ஜீவன்! என நம்மை நாமே! மூடிக் கொண்டோம். நான் ஜீவன் அல்ல. நாம் ஆத்மாவே! என உணர வேண்டும்.

இப்படி மூன்று நிலைகளிலும் கூறிய, எல்லாம் நம் வாக்கின், விவகாரத்தால், விளைந்த கனவே என, உணர்ந்து, எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என உணர்ந்தால், தூங்குபவன் கையில் உள்ள மலர் எப்படி நழுவி விடுமோ, அப்படி இச்ஜகம் நீங்கிவிடும்.



204

கருத்து:- பஞ்சபூதங்கள் இல்லை. பஞ்சபூதங்களான வான,
கோடானு கோடி, அண்டங்களும் / கோள்களும் இல்லை.
இவைகளை உபதேசிக்கும், ஸத்குருவாகிய யானும் இல்லை.
" கேட்கும் ஸத்சிஷ்யனாகிய நீயும் இல்லை.

எ ப் ப டி இ ல் லை யெ ன் றா ல் ?


நா ம ரூ ப / தோ ற் ற மா க / இல்லை.

ஆனால் மண்ணாகிய மரமாகவும் / மரமாகிய நாமமாகவும் /
இருக்கிறோம். என்ற உறுதி நிச்சயத்தில், தெய்வ
த்தை போல் அனுபவிக்கலாம். பழக்கம் / அப்
பழக்கத்தை விட்டு, எப்படி நாமே அகலுமோ / அதேபோல்
இந்த உலகம் / உள்ளே விட்டு அகன்று விடும்.

குறிப்பு:- தூங்குபவன் கையை விட்டு புஸ்தகம்
நழுவி விழுவதும். பழக்க பழக்கம் / அப்பழக்கத்தை
விட்டு, நாமே விலகுவதும் நேர்நிலைப்படுத்தி உணர்ந்
தால்
ஆக்ரமம் / அவசரம் / வேகம் / படபடப்பு / இவைகள் நாசமாகி

உ ண ர் ச் சி க ள் சர்வநாசமாகி

உணர்ச்சி:- வேகம் & அழிவு. உணர்வு:- அமைதி & ஆனந்தம்.




205

பொறுமை! சகிப்புத்தன்மை! விட்டுக்கொடுப்பது!
பணிவு! அன்பு! கருணை! எல்லாம் நலமே என்ற
உ ண ர் வு மே லோ ங் கி னா ல்
இவ்வுலகம்! உ ன் ப ணி யா ள ன்!
ஆகிவிடும். உன் தூல வினை முடியும் வரை!
உனக்கு உபகாரக் கர்த்தாவாக இருந்துவிட்டு
இரண்டு பாடல்களிலும் கூறியபடி இவ்வுலகம்
உன் பார்வையில் / இருந்து மட்டும் மறைந்துவிடும்
மறைந்து விடும் என்றால், உன் தூல கர்மா!
முடிவுற்ற தன்மையால், கர்ம காரியங்களை
உன் தூலம் செய்ய முடியாது. அப்படி நடந்தால்,
அது பரோபகாரமாக நடைபெறும். அங்கு
மனம் கிளைவிடாமல், அறிவுமட்டும், இருப்பதால்;
அந்நிலை, பெற்ற பின்னரே, அது பற்றி விளக்கம்
பெற முடியும். கற்பனையான் மனம் இப்போது
இருப்பதால், கற்பனை கடந்த இடத்தை விளக்க
முடியாது. விளக்கினாலும் அதை அறிய முடியாது.
என்கிறாரு செம்மல்.

மறையும் என்றால் புதுமையாகவும் / மனிதகவும் மாறும். பின் மறையும்.


206



101

தினம் தவிராது அயர்றயிடும் கர்மமென்றும்;
திடமாக செய்கின்ற பக்தி, என்றும்;
அனந்தவித தெய்வ உபாசனைகளென்றும்;
அத்தெய்வ மூர்த்திகளின், பூஜையென்றும்;
மனந்தன்னிலே மருவிய இத்தோற்றமெல்லாம்;
மஹத்தான பரப்பிரம்ம சொரூபமென்றே;
கணந்தவிரா அகண்டபர நிச்சயத்தால்;
களங்கமில்லா பரப்பிரம்மமாத்திரமாவாய்.

கருத்து:- சிரத்தையுடன் செய்கின்ற நித்திய
கர்மா, என்றும்; தெய்வ பக்தி, பஜனை, பூஜை,
என்றும்; உபாசனை மூர்த்திகளின் ஜபதபம்,
என்றும்; இப்படி சொல்வதும்; கேட்பதும்,
மனோமய விருத்தி ஆகும். இம்மனோவிருத்தியை,
அறிவாகவும், பின் பேரறிவாகவும், உன் ஸத்குரு,
கருணையினால், அனுபவம் கூடி, பிரம்மானந்த பாவனை
யால், அதுவே நாம், நாமே அதுவென, ஆகி
சும்மாவே சுகமாகவே இருப்பாயாக.




207

102

புரையற்ற நிருபாதி / சொரூபம் தானே,
புகலும் மஹா வாக்குகளின் பொருளாமன்றி,
பிரிவற்ற சோபாதி / சொரூபமென்றும்,
பேசும் மஹா வாக்குகளின் பொருளென்றே.
விரிவற்ற இவை ஒதவாம் தோற்றமெல்லாம்,
விமலமதாம் / பரப்பிரம்ம சொரூபமென்றே,
தெரிவுற்ற அகண்ட பர நிச்சயத்தால்,
(இ)தியக்கம் இல்லா(து) பரப்பிரம்மமாத்திரமாவாய்.


கருத்து :- குற்றம் குறை என்ற உபாதி இல்லாது / பரசொரூபமே / மஹா வாக்கியங்களின், ஐக்கிய சொரூபமாகும். சோகம் / மோஹம் / பயதுக்கம் / கொடுக்கும், எந்த வாக்கியங்களுக்கும் பொருந்தாது. பரந்து / விரிந்து / காணப்படும் அனைத்தும், மலமற்ற அகண்ட பரப்பிரம்மமென்று, உறுதி நிச்சயத்தால் இயக்கமற்ற பரமேநாம் / நாமேபரம் / என சும்மாவே சுகமாகவே இருப்பாயாக.



103


சருவமுமே பரப்பிரம்ம சொரூபமென்றே;
சகலமறை முடிவுகளும் சாற்றவாயும்;
பிரிவறவே பரப்பிரம்ம ஞானம் பெற்ற;
பெரியோரும் இவ்விதமே பேசவாயும்;
இருளறவே பரசிவமும்! எமக்குமுன்னம்;
இவ்விதமே அருள் செய்த இயல்பினாலும்;
உரைதரும் இவ்வகண்ட பர நிச்சயத்தில்;
ஓரணுவும் ஐயமில்லை உறுதியீதே.

கருத்து :- காலாதீத பரசொரூபத்திற்கு;
அண்டரண்டபிரம்மாண்டங்கள்! எ து வு ம்!
84 லக்ஷம் ஜீவகோடிகளான!
(மனித இனம் உட்பட) எ வ ரு ம்!
வானுலகத்து கோடி தேவர்களும்!
கர்த்தாக்கள் மூ வ ரு ம்! (ஸ்ரீ ப க வா னு ம்
மேலே கூறிய இவைகள்! எ லீ வா ம்!)



எந்த நாம ரூப தோற்றமாகவும் இல்லை.
இது அனுபவமிக்க, ஆதி ஸ்ரீமஹான்களின்
அனுபவ உணர்வாக்காகும். அஞ்ஞான இருள்
அகலும் நிலையில் எம் ஸ்ரீ ஸத்குருவும்
அருளியதும் இதுவே. இதில் சந்தேக கலக்கமயம்
இல்லாமல், மண்ணையே பரமே / பரமாகிய பாமே /
பாமாகிய பரமே! என சும்மாவே சுகமாகவே இருப்பாயாக.

104\. நாமம் / உருபாவையுமே பிரம்மமென்றும்,
நாம் அந்த பரப்பிரம்மம் தாமே என்றும்,
சேமமுறச் செய்திய இவ்வர்த்தம் தன்னில்,
சிறிதேனும் சங்கையில்லை ஸத்தியம் தான்.
நாமமெல்லாம் கடந்தெங்கும் நிறைவாய் நின்ற
தத்துவமாம் சிவம் ஆண் / உண்மை சொன்னோம்.
ஆம்; அவ்வவென்று அணுவும் இதில் சந்தியாமல்,
அறைந்த வண்ணம் அறிதிடமாய் நிச்சயிப்பாய்.



ஓர் உண்மையின் விளக்கம்.


# நாமம்! எல்லாம் கடந்த பரநிலை

நாம் என்றால், ஓசை! அதாவது சப்தத்தில்! அடங்கும். அச்சப்தமானது நாதம்! என்றும், கீதம்! என்றும் பொருள்படும். இயல்பாக நாமாக ஸ்வயமாக ஒலிப்பது நாதம்! என்றும், ஒன்றுடன் ஒன்று! உறவாய் தாவி வருவது கீதம்! என்றும் உணர வேண்டும். ஸ்வயமாக ஒலிப்பது! சூட்சும தெய்வீகம் இது பரநிலை! பிரணவம் ஓம் என்றும் சொல்லலாம்! ஒன்றுடன் ஒன்று உறவு தாவி பெறும் கீதமானது, நாம ரூப! ஜக ஜீவ! லௌகீகம் எனவும் உணர்க. லௌகீகத்தில் பெறுவது, இன்பதுன்பம்! என்றும்,
தெய்வீகத்தில் ,, ஆனந்தம்! ,, ;
பரமார்த்திகத்தில் ,, பிரம்மானந்தம்! ,, ;
உணர்க. இம்மூன்று நிலைகளும்! இல்லாததான

# மஹா மௌனமே! நாமம் கடந்ததான

# பரநிலை!

என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிவிக்கும் இவ்விளக்கத்தின், கருத்தை காண்க.



211

கருத்து :— நாமரூபத்தைமற. நாமரூபம் அநித்தம்

மனதை

பரமே என உணர்.

யாவும், அந்த மண்ணாகிய பரமேயென சத்தியமாய் உணர்.

மண்ணாகிய பரமாகிய ஏகக்கனியம்; எதுவுமில்லை.

என சந்தேக, கலக்க, பயமின்றி, தெளிவாயாக.

நாமரூபம் என இருந்தால் அது ஜீவ நடிகன்

நாமம் மட்டும் ,, ஆத்மமான ,, சிவ நடிகன் ,,


இவ்விரண்டும், அறிந்து, என்பதைச் சொல்லி,

நாமம் கடந்த நிலை :— யோகமாயா, உணர்ந்தும்,

பிரணவமும், பர இருப்பை மட்டும் உணர்ந்தும்

பிரணவ ஹார, இசையின் நாமாவும்,


இல்லாத, மறா மௌனமே, நாமம் கடந்த நிலை.



212

என்று, ஸ்ரீ ஆதிமஹான்களால், சொல்லப்படுகிறது.
ஆகவே, இவ்வாக்கிய விளக்கத்தை மனநிலையில்
கண்டால், குழப்பமும், பயமும் உண்டாகும்.
இதை அறிவு நிலையில், உணர்ந்தால், ஓர்
பேரானந்த வைராவில் ஆனந்த நிலை உண்டாகும்.
இதை பேரறிவு நிலையில், உணர்ந்தால், முடிந்த
முடிவாகிய பிரம்மானந்த நிலை, அனுபவம் பெறலாம்.
பாடலின் இரு வரிகள் :- நாமமெல்லாம் கடந்து
எங்கும் நீக்கமற நிறைவாய் நின்ற
தத்துவமாம் சிவம் ஆனேன். உண்மை சொன்னேன் :-
தற்பத சொரூபம், த்வம்பத ஜீவனும், ஒன்றாய் தம்
ஸ்வய அனுபவ நிலையில், உணர்ந்தவர்களுக்கே, (உணர)
இதை உணர முடியும். ஏனையோருக்கு முடியாது.
ஆகவேதான் சிவம் ஆனேன். என்றேன். அதுவே நாம்.
நாமே அது, என அம்மாவே சுகமாகவே இருப்பாயாக.


பிரம்மத்தின் சுருக்க விளக்கம் கீழே காண்க.



105

நின்னிடையே நிச்சயமாய் நிலைத்து நிற்கும்
நிலைமையதே நிகரற்ற மோக்ஷமாகும்
தன்னிடையே தானகத் தனித்திடாமல்
தரங்கமென சலிப்பதுவே பந்தம் ஆகும்
உன்னியிடில் ஒருவனாய் உன்னையன்றி
உலவுதரும் காரணமோர் அணுவுமில்லை
தன்னியனே தனிமையானவனே
ஆதலினால் நீஎப்போதும்
தன்னிடையே தானகத் தனித்து நிற்பாய்

கருத்து :- திருமூலரின் இப்பாடலை கவனிக்க :-
தன்னை அறிய தனக்கு ஒரு கேடு இல்லை.
தன்னை அறியாமல் (தனக்கு) தானே கெடுகின்றார்.
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னை அர்ச்சிக்கத் தானிருந்தானே. என்றார்.



நமக்கு அன்னியமாய்;

ஏ..........ந்..........கு

கொம்பனோ? வம்பனோ? தும்பனோ? அதமனோ?

எவனும்! எவரும்! எதுவும்!

இல்லை. இல்லை. இல்லவே இல்லை.

அனைத்து ஜீவனும்! ஈசனும்! யாமே.

யாமே பரம்! பரமே யாம்! என்ற உறுதிநிச்சயமே!

ஜீவன் முக்தி! என்ற கைவல்ய மோக்ஷமாகும்.

இவ்வித தன்னில் தான்தானாய் தனித்துநிற்காமல்,

உறவு சுற்றம்

நாம ரூப ஜகத் ஜீவ ^ தோற்றமாகவும்! ஈசனாகவும்;

பாவனை பண்ணல். யத் பாவம் தத் பவதி!


என்ற நியதியில், மீண்டும் விருத்தியால் புண்ணிய

பாப ஜனன மரண பந்தத்தில் பிடிப்பண்ணும்

தன்னை அறியும் அறிவைத் தவிர, வேறு எந்த,

மார்க்கமும் ஆனாலும் பயன் இல்லையென்பதே லக்ஷியம்


மேலும்?



215

நாம ரூப! ஜக ஜீவ! உறவு சுற்றம்!
பொன்! பொருள்! இவைகளையே எண்ணுவது
கடல் அலை போல்! அசையப் பண்ணும்
அசைக்கப் பண்ணும் மேலும்?
உ ன் னு ள்! உனக்கு அயலாக! உன்னை
அசைக்கின்ற, மனம்! புத்தி! சித்தம்! அஹங்காரம்
உன் நிழலேயாகும். உன் நிழல் கண்டு அஞ்சவேண்டாம்.
ஆகவே எம், த னி மை யா ன வ னே!
த ன் னி ல் தா ன்! நி லை த் தி டு வாய்
எம் சிவவாக்கியர் கூறுமோர் பாடல் காண்க.

ஓதும் நாலு வேதமும்! உரைத்த சாஸ்திரங்களும்!
பூத தத்துவங்களும்! பொருந்தும் ஆகமங்களும்!
பொருந்தும் ஜாதி மத பேதமும்! ஓதை தாங்கும் நூல்களும்!
**வேதபேதமாகவே!** பிறந்து இறந்து உழன்றதே.
ஆகவே நீது வேநாம்! நாமே அது! என தன்னில் தான்
நிலைத்து, சும்மாவே சுகமாகவே இருப்பாயாக.



105 வது பாடலில் உட்பிரிவு.

திருமூலரின் பாடலின் உட்கருத்து:-

தன்னை நாமரூப! இன்றை!
கெடுத்து! நாம் ஆத்மா என்ற "
கொடுத்து! நாமரூப உணர்ச்சிகள்! சர்வ நாசமாகி!
நாம் அது! அதுவே நாம்! என சும்மா சுகமாக!
ஆனந்தமாக! இருப்பதாகும். இந்த ஆன்ம!
உணர்வை பெறுவது எளியது எந்த கஷ்ட சிரமமும் இல்லை.
நாமரூப! இன்ப துன்பத்தை புசித்து புசித்தும் நம்
(அஹங்கார, அதிகார, ஆசக்தி, போதைமயக்கம்)
ஏறி கறை படிந்து போன தன்மையினால்; ஒட்டியட்ட
மனோ சிரமமே! இன்று கடினமாகத் தோன்றுகிறது,
முறையோடு சர்வார்ப்பணமும்! பின் அனுபவத்தின்
பிரம்மார்ப்பணமும்! சிரத்தையின் நம்பிக்கை
வைராக்கியத்தால் செய்தால், அதிசுலபமே! சுகமே!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!